Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-16

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-26 08-02-2005 செவ்வாய்க்கிழமை ஓசை -356



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

T.P: 024-222 4247 (சி-11252)

- மட்டு- அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் -

# லெப்.கேணல் கௌசல்யன் உட்பட 4 போராளிகள் சுட்டுக்கொலை!

## வெலிக்கந்த ராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியில் சம்பவம்

(நமது நிருபர்)

**மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் அவர்களும் அவருடன் பயணித்த மேஜர் புகழன், மேஜர் செந்தமிழன், 2ஆம் லெப். விதிமாறன் ஆகிய போராளிகளும் இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.**

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நாமக்கல் பிள்ளையாரடி என்ற இடத்தில் நேற்று இரவு 7.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

நாமக்கல் பிள்ளையார் கோவிலடியில் இறங்கிவிட்டு வாகனத்தில் ஏறிப்புறப்பட, வாகனத்தில் ஏறியசமயமே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.



லெப்.கேணல் கௌசல்யன்

## துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம்

பொலநறுவை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு எதிராக இன்று பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும், மலையக மக்கள் முன்னணியும் அறிவித்துள்ளன.

இன்று சிறிலங்காவின் பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார். (32)

### இணைப்பு

சுனாமி அனர்த்தத்தில் சாவடைந்த அரச ஊழியர் எண்மரை நினைவுகூரும் 45 ஆம் நாள் நினைவு வர்ணப்பிரசுரம் இன்றைய நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## சந்திரநேரு அரியநாயகம் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்!

மட்டு -அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் அவர் கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்ப வத்தில் அவருடன் பயணம் செய்த முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் அவர்களும் படுகாயமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மேலும் இச்சம்பவத்தில் சந்திரநேரு அரியநாயகம் அவர்களின் மெய்ப்பாதுகாவலர்களான இரண்டு பொலிஸ்கான்டபிள்களும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்துள்ள சந்திரநேரு அரியநாயகத்தின் உடல் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

— சுனாமி அனர்த்தத்தில் சாவடைந்த —

## முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள் இன்று நினைவு கூரப்படுகின்றனர்

26.12.2004 அன்று இடம் பெற்ற சுனாமி அனர்த்தத்தில் சாவடைந்த முன்பள்ளி ஆசிரியர்களினதும், முன்பள்ளி சிறார்களினதும் 45 ஆம் நாள் நினைவுநிகழ்வுகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் வடக்கு- கிழக்கு பகுதிகளில் நடைபெறவுள்ளன.

இன்றைய தினம் நடைபெறவுள்ள இந்நிகழ்வு தொடர்பாக முன்பள்ளி கல்வி மேம்பாட்டுநிலையமும் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவும் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளன. அதில் 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமிப் பேரலை அனர்த்தத்தின் போது சாவடைந்த அனைத்து மக்களையும் நினைவு கொள்வதோடு சிறப்பாக எமது தேசக்கட்டுமானத்தின் எதிர்காலச் சிற்பிகளான முன்பள்ளிச் சிறார்களை நற்பிரஜைகளாக உருவாக்கும் தேசப்பணியில் அர்ப்பணிப்புடனும் சேவை உணர்வுடனும் சமூகப் பற்றுடனும்சேவை செய்த ஆசிரியர்களை நினைவு கூருகின்றோம்.

தேசத்தின் அத்திவாரங்கள் சமூகத்தின் திறவுகோல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இன்று புலிகளைச் சந்திப்பர்

இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று கிளிநொச்சி செல்லவுள்ள இவர்கள் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். நேற்று உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேசஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி ஆகியவற்றின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகள் ஊடகவியலாளர் சந்திப்புஒன்றைக் கொழும்பில் நடத்தியிருந்தனர்.இதன்போதே இத்தகவலை வெளியிட்டுள்ளனர். (32)

## வட-கிழக்கு பகுதிகளுக்கான உதவிகள் சர்வதேச அ.சா.நி ஊடாக வழங்கப்படும்

- ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஈவன்ஸ்

சுனாமி ஆழிப் பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு பிரதேசங்களுக்கான புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டுமான உதவிகளை ஐரோப்பிய நாடுகள் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களூடாகவே வழங்கும் என ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் ஈவன்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் சி. இளம்பருதியைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு பேட்டியளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு சர்வதேசத்தால் வழங்கப்படும் உதவிகள் யாவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரிவரப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் ஐரோப்பிய நாடுகள் அதிகம்

(16ஆம் பக்கம் பார்க்க)

-உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில-

## தென்மராட்சி மக்கள் போராட்டத்தில் வலி -வடக்கு மக்களும் இணைவர்

உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்ற வலியுறுத்தி யாழ். செயலகம் முன் நாளை மறுதினம் முதல் தென்மராட்சி மக்கள் நடத்தவுள்ள மறியல் போராட்டத்திற்கு வலி-வடக்கு இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளது.அத்துடன் பாதிக்கப்பட்ட வலி-வடக்குப் பகுதி மக்களும் இப் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக அவ் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.(27)

## அரசின் செயற்பாட்டால் சர்வதேச உதவிகள் தமிழருக்கு கிடைக்காது போகும் அபாயம்

- ஐரோப்பிய பா.உ விற்கு இளம்பரிதி தெரிவிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு சர்வதேச நாடுகளால் வழங்கப்பட்டுவரும் நிதி நிவாரண மீள்கட்டுமான உதவிகள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் சரிவர பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதற்காக புலிகளால் முன்வைக்கப்பட்டுள்.ள பொதுக் கட்டமைப்பு யோசனைகளை ஏற்றுக் கொள்ள இலங்கை அரசாங்கம் முன் வாரததினால் சர்வதேச உதவிகள் தமிழ் மக்க

(16ஆம் பக்கம் பார்க்க)




## பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச பேருந்து சேவை

சுனாமி பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களின் நன்மை கருதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் இலவச பேருந்து போக்குவரத்துப் பணி இன்று முதல் ஆரம்பிக்கின்றது.

சுனாமியால் பெரும் அழிவைச் சந்தித்த வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கே இவ்ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. செம்பியன் பற்றிலிருந்து புறப்படும் பேருந்து கட்டைக்காட்டினூடாக புதுக்காட்டுச்சந்தியை சென்றடையும். இப்பேருந்து மீண்டும் அதே வழியினூடாக செம்பியன்பற்றை வந்தடையுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி






அன்ரனி பெனடிற்
அகிலன்
10.05.1997

எட்வேட் றெக்சன்
நிதர்சனா
12.06.2003

அன்ரனி பெனடிற்
வரதலட்சுமி
06.09.1958

ஆழியின் சீற்றத்தில் 26.12.2004

எட்வேட் றெக்சன்
மேரிறெயினா.
09.12.1984




கபில்சீலன்
அனுசியன்
01.05.2003

பூமாதேவியின் மடியினில்
வந்துதித்த உத்தம புத்திரனே!
தரணியெல்லாம் பெயர் விளங்க
வைத்த அனுசியனே!
காலனின் கடைக்கண் பார்வையிலே
இயற்கைப் பேரலையின் கோரப் பிடியிலே!
உன்னுயிரை நீ விட்டாலும் - இல்லை
நாட்கள் நாற்பத்தைந்து ஆனாலும்
நீ எம்மோடு சேர்ந்திருந்த நாட்கள் எம்மை
விட்டு நீங்காதையா!

எட்வேட் றெக்சன்
நிதர்சன்
05.04.2003

உன் பிரிவால் துயருறும்!
அப்பா :- கபிலன்
அம்மா :- லலிதா
விநாயகர் வீதி - துணுக்காய்

(4147)

நிரந்தர முகவரி
வண்ணாங்குளம்
முல்லைத்தீவு

கபில சீலன் அனுசியனின் 45ஆம் நாள் நிகழ்வு 08.02.05 திகதி விநாயகர் வீதி துணுக்காயில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

## கூட்டங்கள்

(அலுவலக செய்தியாளர்)

மேட்டு நிலப்பயிர்ச் செய்கை 2005 இற்கான மேட்டு நிலச் செய்கை பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளும் பொருட்டு அக்கராயன் கரைச்சிப் பிரதேச செயலக உப பணிமனையில் இன்று முற்பகல் 10.00 மணிக்கு ஏற்று நீர்ப்பாசன பயிர்ச் செய்கைக்கு கூட்டமும், பிற்பகல் 2.00 மணிக்கு கண்ணகை புரம் பாடசாலையில் அக்கராயன்குளம் ஈர்ப்பு நீர்ப்பாசன பயிர்ச் செய்கைக் கூட்டமும் நாளைமறுதினம் கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலையில் மு.ப 10.00 மணிக்கு கனகாம்பிகைக்குளம் ஏற்று. நீர்ப்பாசனப் பயிர்ச் செய்கை கூட்டமும் நடைபெறவுள்ளது எனவே மேறபடி கூட்டத்திற்கு அந்தந்தப் பகுதி கிராம சேவை அலுவலர்கள் மற்றும் திட்ட உப குழுக்கள், கிராமிய உப குழுக்கள,விவசாயிகளை தவறாது சமூகமளிக்கும் வண்ணம் கரைச்சி பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி வேண்டியுள்ளார். (சோ)

## 45 ஆம் நாள் நினை வலையில்

### றஞ்சன் மகேஸ்வரி

(செல்வபுரம்,முல்லைத்தீவு)

ஜனனம்
09.01.1989

மரணம்
26.12.2004

அழகான உந்தன் மதிவெண் முகத்தை
ஆழிப்பேரலை அள்ளிச் சென்றதேனோ?
ஆறாத் துயரில் எமையெல்லாம் ஆழ்த்திவிட்டு
உனைமட்டும் தனியாய் எடுத்துக்கொண்டதேனோ?
உன் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கும் நெஞ்சங்கள்.

அன்பு அப்பா,அம்மா
உடன்பிறவா
சகோதரிகள்.

தகவல் :
A.சுகிர்தா,
புதுக்குடியிருப்பு.

(5677)

## நீங்காத நினைவில்...

அன்பு மலர்களே!
மொட்டாகி மலருமுன்னே
கடலலை உங்களைக் காவு கொண்டதேனோ?
மலர்ச்சோலையில் மலர்ந்த
செந்தளிர் சிட்டுக்களே
உங்கள் நினைவை மன தெழுதிச்
சொரிகின்றோம் கண்ணீரை ஆற்ற முடியவில்லையே!
எம் பிஞ்சுகளின் இழப்பை
மீண்டுமொருமுறை பிறப்பிருந்தால்
எம் பிஞ்சுகளுடனேயே பிறந்துவிடத்துடிக்கும்

அம்மாமார், சித்திமார்,
செந்தளிர் சகோதரர்கள்,
பணியாளர்கள்.

(5679)

## 45ஆம் நாள் நினைவலையில்



அன்னை மடியில்
1984 ♦ 05 ♦ 10

ஆழியின் மடியில்
2004 ♦ 12 ♦ 26

செல்வி ஜேசுராசா ஜெயவதனா,
வண்ணாங்குளம் - முல்லை வட்டுவாகல்,
முன்பள்ளி ஆசிரியை.

அலெக்ஸ் முன்பள்ளியில் கற்பித்தலில் மேலோங்கி காலத்தின் தேவையறிந்து கண்ணியம் பேணி ஆசிரியப் பணி செய்யக் காத்திருந்த வேளைகடற் கோள் உன்னைச் சாவுகொண்டதோ நீர் வளர்த்த பிள்ளைகள் காலம் எல்லாம் ஏங்கிட உன் நினைவுகள் காலமுள்ளவரை எம்மோடு வாழும்

பிரிவால் துயருறும்
வட்டுவாகல் அலெக்ஸ் முன்பள்ளி
ஆசிரியர், சிறார்கள், பெற்றோர்கள்

(5678)

## 45 ஆம் நாள் நினைவலைகள்



கடல் அன்னையின் மடியில்
26.12.2004

தாலாட்டும் கடல் அன்னையின் கரையினில்
தன்னிகரில்லா சேவை செய்து வாழ்ந்த என் [illegible]த்தே
உன்னுடன் உன்மகளையும் சேர்த்துச் சென்றாயோ
உங்கள் நினைவுடன் நான் ஏங்கித் தவிக்கின்றேன்
ஒரு தடவை என்னிடம் வாருங்கள்



திருமதி. ஜெகதீஸ்வரி சுரேஸ்குமார்
பிறப்பு:- 19.05.1978
தலைமைக் காவலர்
தமிழீழக் காவல்துறை,
முல்லைத்தீவு.

சுரேஸ்குமார் சிந்துஜா
பிறப்பு:- 16.05.2001
கள்ளப்பாடு - முல்லைத்தீவு.

இருவரினதும் 45ஆம் நாள் நினைவும், அந்தியேட்டி நிகழ்வும் 08.02.2005 செவ்வாய்க் கிழமை கணுக்கேணி மேற்கில் அமைந்துள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்

கள்ளப்பாடு
முல்லைத்தீவு

(சி.11244)

பிரிவால் துயருறும்
கணவன், அப்பா
சுரேஸ்குமார்


இதோ 07 - 02 - 2005 முதல்

தமிழ் கணினி மின்னியல் மையத்தின் ஆதரவில் வன்னியில் முதன் முதலாக
உதயமாகின்றது.

மகளிருக்கான

நாட வேண்டிய இடம்
கணினி விளையாட்டுக்கள்
கச்சேரி அருகாமை வீதி
கிளிநொச்சி.



கணினி சுயபயிற்சி நெறியும் கணினி



விளையாட்டுக்களும்

(சி - 11265)

# மேற்கு நாடுகளுடன் நெருங்கிய உறவு வேண்டுமானால் சனநாயகத்தை ரஷ்யா பலப்படுத்த வேண்டும்

## அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் நிபந்தனை

(அங்காரா)

**"மேற்கத்திய நாடுகளுடன் நெருங்கிய நட்புறவு வேண்டும் என்று ரஷ்யா விரும்பினால் அது சனநாயகத்தைப் பலப்படுத்த வேண்டும் " என்று அமெரிக்கா கோரியுள்ளது துருக்கியில் ரஷ்யா வெளியுறவுத்துறை அமைச்சரை அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் சந்தித்த போதே இந்த நிபந்தனையை அவர் விடுத்துள்ளார்.**

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிசா றைஸ், பதவி ஏற்றபிறகு முதல் முறையாக வெளிநாட்டு சுற்றுப்பயணம் மேற்கொண்டார் .ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசிய நாடுகளில், எட்டு நாள் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்.

துருக்கி நாட்டில், அவர் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லப்ரோவை சந்தித்துப் பேசினார். விருந்துடன் நடந்த இந்தச் சந்திப்பு இரண்டு மணி நேரம் நடந்தது.

அப்போது சனநாக நெறி முறைகளுக்கு ரஷயா கடமைப் பட்டு இருப பதாக நம்புமானால் அதை வெளிப் படுத்தும் வகையில் ரஷ்யா நடந்து கொள்ளவேண்டும் என்றும், மேற் கத்திய நாடுகளுடன் நெருங்கிய உறவு நீடிக்க வேண்டும் என்று விரும் பினால் சனநாயக நெறிமுறைகளை ரஷ்யா பாது காக்க வேண்டும் என்றும் எச்சரித்தார்.

சட்டப்படியான ஆட்சியை ரஷ்யா பலப்படுத்த வேண்டும். அரசாங்க குறுக்கீடு இல்லாத நீதித்துறை இருக்க வேண்டும். பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும் என்று றைஸ் வலியுறுத்தினார்.

ரஷ்யாவில் நீதித்துறையின் செயல்பாடு மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

இதற்குப் பதில் அளித்த ரஷ்ய மந்திரி, சட்டப்படி தான் நீதி நிர்வாகம் நடக்கிறது என்றும், பத்திரிகைகள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடுகின்றன என்றும் தெரிவித்தார் ரஷ்ய மந்திரியின் இந்தப் பதில், அமெரிக்காவின் கவலையைக் களையவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் கூறினர்.

போலந்து நாட்டில் வார்சா நகரில் றைஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

" சட்டப்படியான ஆட்சி தான் நடக்கிறது என்பதை ரஷ்யா உலகத்துக்குத் தெரிவிக்க வேண்டும் இது சனாநாயகத்துக்கு அடித்தளமானது தனிமைப் படுத்தப் படுவதை ரஷயா விரும்பாது அதானல் ரஷ்யா, தன்னை திருத்திக் கொள்ளும் கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும், இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயறபட்டு வருகின்றன என்றார்.

## இஸ்.,பலஸ்தீன அதிகாரிகளுடன் கொண்டலிசா றைஸ் பேச்சு

(டெல்அவிவ்)

அமெரிக்காவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிசாறைஸ் இஸ்ரேலிற்குச் சென்று அங்கு இஸ்ரேலிய, பலஸ்தீன தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்ட லிசா றைஸ், எட்டு நாள் பயணமாக ஐரோப்பா, இஸ்ரேல், பலஸ்தீனம், துருக்கி உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். துருக்கிக்கு கடந்த சனிக் கிழமை சென்ற றைஸ் அந்நாட்டுத் தலைவர்களை சந்தித்துப் பேசினார். துருக்கிப் பயணத்தை முடித்துக் கொண்டு இஸ்ரேல் பயணம் சென்றுள்ள றைஸ் அந்நாட்டு பிரதமர் ஏரியல் ஷரோனை சந்தித்துப் பேசுகிறார். பலஸ்தீன தலைவா முகமது அப்பாஸையும், றைஸ் சந்திக் கவுள்ளார். பலஸ்தீன தலைவர் யசிர் அராபத் மறைவுக்குப் பின் இஸ் ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் மீண்டும் அமைதிப் பேச்சு வார்த் தையை தொடங்குவதற்கு றைஸ் முயற்சி மேற்கொள்ளவுள்ளார். இஸ் ரேலுக்கு சாதகமாக அமெரிக்கா செயல்படுவதாகக் கருதும் பலஸ் தீன மக்களின் கருத்தை மாற்றவும் றைஸ் திட்டமிட்டுள்ளார்.



இந்தியாவில் வாழும் நேபாள குடி மக்கள் மன்னர் ஞானேந்திராவை கண்டித்து டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்திய காட்சி.

## ஈராக் உணவுக்கு எண்ணெய் திட்ட ஊழல் குறித்து கொபி அனானின் ஆவணங்கள் பரிசீலனை

(வோஷிங்டன்)

உணவுக்கு எண்ணெய் திட்ட ஊழல் தொடர்பாக ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனானின் ஈ-மெயில், தொலைபேசி ஆணவங்களை வால்கர் தலைமையிலான விசாரணைக் குழு ஆய்வு செய்து வருகிறது.

குவைத் மீது படையெடுத்ததால் ஈராக் மீது கடந்த 1991 இல் ஐக்கிய நாடுகள் சபையால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. ஈராக் மக்களின் அத்தியாவசிய தேவைக்காக, உணவுக்கு எண்ணெய் திட்டம் அனுமதிக்கப்பட்டது. இதில் ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனானின் மகன் கோஜோ, முறைகேடு செய்தார் என்றும் லஞ்சம் பெற்றார் என்றும் கோஜோவின் முறைகேட்டுக்கு கொபிஅனான் உதவி செய்ததாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. இத்திட்டத்தில் நடந்த முறைகேடு பற்றி அமெரிக்க பெடரல் வங்கி முன்னாள் தலைவர் பால் வால்கர் தலைமையிலான குழு விசாரிக்கிறது. சமீபத்தில் இக் குழு, இடைக்கால அறிக்கையைத் தாக்கல் செய்தது. திட்டத்தை கண்காணிக்க ஐ.நா. வால் நியமிக்கப்பட்ட பெனன் செவன் அதிகளவில் லஞ்சம் பெற்றதாக அறிக்கையில் குற்றம் சாட்டப் பட்டது.

சுவிற்சர்லாந்தில் உள்ள கம்பெனியில் கொபிஅனானின் மகன் பணி புரிகிறார். தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இந்நிறுவனதுக்கு குறைந்த விலையில் ஈராக் எண்ணெயை விற்க கொபிஅனான் உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவர் அப்படி செய்தாரா என்பதற்கான ஆதாரங்களை வால்கர் குழு திரட்டி வருகிறது. இதனையடுத்து திட்டம் தொடர்பாக கொபிஅனான் கையாண்ட ஆவணங்கள்,ஈ-மெயில் மற்றும் தொலைபேசி ஆவணங்களை குழு பரிசீலித்து வருகிறது.



பிரேசில் நாட்டின் தலைநகர் பிரேசிலியாவில் சகதியில் உருளும் திருவிழா கடந்த சில ஆண்டுகளாக பிரபலாமாக நடைபெற்று வருகிறது.

## 2004 இல் இந்தியா-சீனாவுக்கிடையில் 61 ஆயிரத்து 200 கோடி ரூபாவுக்கு வர்த்தகம்

(பீஜிங்)

இந்தியா-சீனா இடையே 2004 இல் 61 ஆயிரத்து 200 கோடி ரூபாவுக்கு வர்த்தகம் நடந்துள்ளது. அதற்கு முந்தைய ஆண்டை விட இது 79 சதவீதம அதிகம் இந்தியா -சீனா இடையே எல்லைப்பிணக்குத் தொடர்ந்தாலும், வர்த்தக உறவில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் ஆண்டு தோறும் உயர்ந்து கொண்டிருக்கிறது. 2004 ஆம் ஆண்டில் முன்பு எப்போதும் இல்லாத வகையில் மிகப்பெரிய சாத னை அளவாக 61 ஆயிரத்து 200 கோடிரூபாவுக்கு வர்த்தகம் நடந்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டில் இரு நாட்டுக்கும் இடையே 13 ஆயிரத்து 500 கோடி ரூபாவுக்கு வர்த்தகம் நடந்தது. 2002 இது 22 கோடி ரூபாவாகவும், 2003 இல் 34 ஆயிரத்து 200 கோடி ரூபாவாகவும் உயர்ந்தது. 2004 இல் இது 61ஆயிரத்து 200 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது. இதன் மூலம் அரசு எதிர்பார்த்ததை விட 16 ஆயிரத்து 200 கோடி ரூபாவுக்கு அதிக வர்த்தகம் நடந்துள்ளது.

கடந்தாண்டு சனவரி முதல் டிசம்பர் வரை சீனாவுக்கு இந்தியா 34 கோடியே 560 கோடி ரூபாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. அதற்கு முதல் ஆண்டை விட இது 80.5 சதவீதம் அதிகம் அதேசமயம் சீனாவில் இருந்து 26 ஆயிரத்து 685 கோடி ரூபாவை மதிப்புள்ள பொருட்களை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இதன் மூலம், இந்தியா 7 ஆயிரத்து 875 கோடி ரூபாவை கூடுதலாக ஈட்டியுள்ளது.

## பாகிஸ்தானியர்கள் இரண்டு பேருக்கு சவுதியில் மரண தண்டனை நிறைவேற்றம்

ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இரண்டு பாகிஸ்தானியர்க்ள் சவுதி அரேபியாவில் நேற்று முன்தினம் தலை துண்டித்துக் கொல்லப்பட்டனர். முஸ்லிம் நாடான சவுதிஅரேபியாவில் இஸ்லாமியச் சட்டம் கடுமையாக பின் பற்றப்பட்டு வருகிறது கொலைக் குற்றவாளிகள், கற்பழிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள், போதை பொருள் கடத்தல் காரர்கள ஆகியோருக்கு இங்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. பொது இடத்தில் மக்கள் முன்னிலையில் தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுவருகிறது. சவுதிஅரேபியாவில் கடந்த 2003 ஆம் ஆண்டு 53 பேருக்கும், 2004 ஆம் ஆண்டு 35 பேருக்கும் மரணதனடனை நிறைவேற்றப் பட்டது. இந்த ஆண்டு இதுவரை 11 பேரின் தலை துண்டிக்கப் பட்டுள்ளது.

## மலேசியாவில் சுனாமி எச்சரிக்கை ஆயிரக்கணக்கான மக்கள் ஓட்டம்

தெற்குப் பிலிப்பைன்ஸில் சனிக்கிழமை பின்னிரவு மிகப்பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு மானியில் அது 7.2 அலகாகப் பதிவானது. அத் தகவல் கிடைத்ததும் மலேசியா நாட்டின் சபா மாநிலத்தில் அரசு விடுத்த எச்சரிக்கையை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் கடலோரப் பகுதிகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பி ஓடினர். இக்காட்சி கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி நிகழ்ச்சிகளை அனைவருக்கும் நினைவுபடுத்தியது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென் பகுதியில் கடலுக்கடியில் மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அதை ரிச்டர் அளவு மானியில் பதிவு செய்த உடனே அப்பகுதி அதிகாரிகள் மலேசியாவை எச்சரித்தனர். மலேசிய அரசு உடனே கடலோரம் உள்ள சபா மாநிலத்தை எச்சரித்தது. உடனே அம் மாநில அதிகாரிகள் வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஒலி பெருக்கிகள் மூலம் மக்களை எச்சரித்தனர். இரவு நேரமாக இருந்த போதிலும் கடலோரம் வசிப்பவர்கள் வீடுகளைவிட்டு மேடான பகுதிக்கு ஓடினர். ஹோட்டல்களில் தங்கியிருந்த சுற்றுலாப் பயணிகளும் கிடைத்த வாகனங்களில் ஏறி அங்கிருந்து அகன்றனர்.

## அந்தமானில் நேற்று மீண்டும் நில நடுக்கம்

கடந்த டிசம்பர் மாதம் அந்தமானில் ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமி தாக்குதல் பெரும் சேத்தை ஏற்படுத்தியது.

அந்த நில நடுக்கத்தைத் தொடர்ந்து அந்தமானில் தினம்தோறும் நில அதிர்வுகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கிறது. இது வரை 320 முறைக்கு மேல் அந்தமானின் பல்வேறு பகுதிகளில் நில நடுக்கம் ஏற்பட்டு விட்டது.

இந்த நிலையில் நிக்கோபார் தீவுக் கூட்டத்திலுள்ள கமோர்டாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை மீண்டும் நில நடுக்கம ஏற்பட்டது. காலை 5.44 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.3 புள்ளிகளாகப் பதிவானது.





(முல்லைக் கரையோரம் ஒதுங்கிய பொருட்கள் (படம்-வரன்,சசி)

# சுனாமியால் அள்ளுண்டு போன பொருட்கள் முல்லையில் பெருமளவு கரையொதுங்குகின்றன!

–பிற நாடுகளின் பொருட்களே அதிகம்

(அலுவலக செய்தியாளர்)

**சுனாமி பேரலையினால் கடலினுள் இழுக்கப்பட்ட அனேகமான பொருட்கள் முல்லைக் கடற்கரையில் கரையொதுங்கி வருகின்றன.**

சுனாமிப் பேரலைகள் ஆசியாவில் பல நாடுகளின் கரையோரப் பகுதிகளைத்தாக்கி அழிவுக்குள்ளாக்கியதோடு பெருந்தொகையான மக்களையும் கடலினுள் இழுத்துக் கொண்டதோடு தாக்கத்திற்குள்ளான பகுதிகளிலிருந்த பொருட்களும் கடலினுள் இழுக்கப்பட்டன. இவ்வாறு இந்தோனேசியா மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்து கடலிற்குள் சென்ற பொருட்கள் மட்டக்களப்பு அம்பாறை ஆகிய பகுதிகளில் ஏற்கனவே கரையொதுங்கி வரும் நிலையில் அண்மைய நாட்களில் முல்லைத்தீவுக் கடற்கரைகளிலும் இவ்வாறு பெருமளவான பொருட்களும் கரையொதுங்கி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தவகையில் இனங்காண முடியாத பாரியளவிலான மரங்களும், பெருமளவிலான தேங்காய்களும் மற்றும் கமுக மரங்கள் அத்தோடு ஏனைய பாவனைப் பொருட்களின் உடைந்த பகுதிகள் என்பன பெருமளவில் கரை யொதுங்கியுள்ளன. இதேவேளை கடலினுள்ளும் இவ் வாறான பொருட்கள் மிதப்பதைக் காணக்கூடியதாகவுள்ளதோடு கடலினுள் மிதக்கும் மரங்கள் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் உபகரணங்களுடன் மோதுண்டு உடைவுகளை ஏற்படுத்தக் கூடுமெனவும், இவை அகற்றப்படாத பட்சத்தில் முற்றாக தொழிலில் ஈடுபட முடியாதிருக்குமெனவும் அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச.கு)

# சர்வதேச ஆங்கிலப் பாடசாலையின் ஓராண்டு நிறைவு விழா


கிளிநொச்சியில் அமைக்கப்பெற்று தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் சர்வதேச ஆங்கிலப்பாடசாலையின் ஓராண்டு நிறைவு விழா கடந்த புதன் கிழமை காலை 9.00 மணியளவில் பாடசாலையின் பணிப்பாளரும், தமிழர்புனர்வாழ்வுக்கழக கல்வி அபிவிருத்திக்கான பணிப்பாளருமான ச.ராஜகோபால் தலைமையில் இடம்பெற்றது.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, தேசியக்கொடியேற்றப்பட்டதை யடுத்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும், பாடசாலையினதும் கொடிகள் ஏற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சிறுவர் நல ஒருங்கிணைப்புப் பணிப்பாளரான ரவியும், பிரதம விருந்தினராக முன்பள்ளிக்கான வலயக்கல்விப் பணிப்பாளர் சிவநாதனும் கலந்து சிறப்பித்துள்ளனர். இவ் விழா நிகழ்வில் சிறப்புரையினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கல்வி அபிவிருத்திக்கான பணிப்பாளரும், சர்வதேசப் பாடசாலையின் பணிப்பாளருமான எஸ்.ராஜகோபால் நிகழ்த்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந் நிகழ்வுகளுக்கிடையில் சுனாமிப் பேரலையின் அனர்த்தத்தினால் சாவடைந்த இப்பாடசாலையில் கல்வி கற்று வந்த மாணவனான செல்வன் திலக்ஷனுக்கு அக வணக்கமும் செலுத்தப்பட்டது.

# பாதிப்புற்றோருக்கு நம்பிக்கையூட்டும் "இரை தேடிய இயற்கை" நாடகம்

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் பொ.செ.ரகுவின் நெறியாள்கையில் உருவாக்கம் பெற்ற "இரைதேடிய இயற்கை" வீதி நாடகம் திருமலை மாவட்டத்தில் சகல இடங்களிலும் தற்போது நடை பெற்று வருகின்றது.



மேற்படி நாடகமானது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையையும், மன உறுதியையும் விழிப்புணர்வையும் வழங்கி வருவதோடு சிறுவர்களது மன நிலையைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. நகைச்சுவையாக ஆழமான கருத்துடன் நகர்ந்து செல்லும் மேற்படி வீதி நாடகம் அனைவரினதும் பாராட்டையும் பெற்றுள்ளது.

இந் நாடகம் உள வள துறை சார்ந்த மருத்துவர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# வடக்கு– கிழக்கு மாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த 2,407 மாணவர்கள் ஆழிப்பேரலையில் உயிரிழப்பு!

-மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் தகவல்

ஆழிப் பேரலையினால் வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த 2,407 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களுடன் 29 ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தகவல் வெளியிட்டுள்ளார்.

கடந்த வார இறுதியில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்த இவர் ஆழிப் பேரலையினால் சேதமடைந்துள்ள பாடசாலைகளைப் பார்வையிட்டதோடு பாதிக்கப்பட்ட மாணவர்களையும் சந்தித்தார்.

அகதி முகாம்களாக இயங்கும் பாடசாலைகளை நேரில் சென்று பார்வையிட்ட இவர், தற்காலிகமாக அப் பாடசாலைகளை வேறு இடங்களில் இயங்க வைப்பது குறித்தும் ஆராய்ந்துள்ளார்.

இம் மாகாணங்களில் 54 பாடசாலைகள் முழுமையாகவும், 67 பாடசாலைகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

—சுனாமியால் பாதிப்புற்ற—

# வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

சுனாமி ஆழிப்பேரலையின் போது பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வடமராட்சி கிழக்கில் கடற்புலிகளும்,மாணவர் அமைப்பினரும் இணைந்து வழங்கி வருகின்றார்கள். அதன்படி மாணவர்களுக்கு கொப்பிகள், பென்சில்கள், கலர்கள் மற்றும் விளையாட்டுப்பொருட்கள் போன்றவைகள் வழங்கப்பட்டுள்ளன. கேவில் அ.த.க. பாடசாலை,கட்டைக்காடு றோ.க.பாடசாலை,தாளையடி றோ.க. பாடசாலை ஆகியவற்றுக்கு இவை வழங்கப்பட்டன. (11)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

தேசிய அடையாள அட்டை ஏ-9 பிரதான வீதியின் இரணைமடு சந்திப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு தமிழீழ காவல் துறையினரின் கிளிநொச்சி குற்றத் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பத்மநாதன் - பத்மசுவேந்திரன் 831954590V என்ற இலக்கமுடைய அடையாள அட்டையே மேற்படி காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் கடமை நேரத்தில் வந்து பெற்றுக்கொள் ளலாம் எனக் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுபாளர் கானகன் தெரிவித்துள்ளார். (கு)

# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான புதிய தொழிற்பயிற்சித் தளம் திறப்பு

-பாடநெறிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

போர் அனர்த்தங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கல்வி, தொழிற் கல்வி அபிவிருத்தி நிறுவனத்தில் பாடநெறிப்பிரிவுத் தளமொன்று கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் சம்பிரதாயப்பூர்வமான முறையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழில் நிறுவனத்தின் (ILO) நிதியுதவியுடனும் கிளிநொச்சியிலுள்ள ரீடோ நிறுவனத்தினது நிர்வாக அனுசரணையுடனும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் இப்பயிற்சித்தளம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேசியக்கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

தொழிற்பயிற்சிக்கல்லூரியின் கீதத்தினைத் தொடர்ந்து தொழிற் பயிற்சிப்பாட நெறிக்கான பெயர்ப் பலகையினை தமிழர் புனர் வாழ்வுக்கழக நிர்வாகப்பணிப் பாளர் வின்சன் திரைநீக்கம் செய்து வைத்தார். அதைத் தொடர்ந்து தொழிற்பயிற்சிப் பாடநெறிக்கான புதிய பிரதான கட்டடத் தொகுதியினை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவும், சர்வதேச தொழில் நிறுவனத்தின் வடபகுதிக்கான இணைப்பாளர் ஜோசப்பும் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கல்வி, தொழிற்கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் அந் நிறுவனப்பணிப்பாளர் யோகன் தலைமையில் ஒன்று கூடல் ஆரம்பமாகியது. அவரது தலைமை உரையினைத் தொடர்ந்து நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கி.பாப்பா, ரீடோ நிறுவனப்பணிப்பாளர் அன்ரன் செல்வராஜ், தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிரிஸ்ரி, சர்வதேச தொழில் நிறுவன தொழிற் பயிற்சிப் பாடநெறி ஆலோசகர் சிவா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இறுதியாக ரீடோ நிறுவன தலைமை இணைப்பாளர் சீலனின் நன்றி உரையுடன் நிகழ்வுகள் இனிது நிறைவு பெற்றதைத் தொடர்ந்து உத்தியோக பூர்வமாக தொழிற்பயிற்சிப் பாடநெறிகள் ஆரம்பமாகின.

# முல்லைத்தீவை மீளக் கட்டியெழுப்ப விழிப்பு ஒன்றியம் கலந்துரையாடல்

(முல்லை)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவினை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடன் வெளிநாட்டில் வாழும் முல்லை மக்களின் (முல்லை விழிப்பு ஒன்றியம்) ஆதரவுடன் இங்கு வருகை தந்து நாளை மாலை 3.00 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் மாபெரும் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மக்களின் எதிர்கால நலன் குறித்தே கலந்துரையாடப்படவுள்ளதால் முல்லைத்தீவு மக்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு முல்லை. விழிப்பு ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது. (20)

# எமது வீடுகளில் குடியிருக்க அனுமதி மறுத்தால் தொடர் வெகுசனப் போராட்டத்தில் குதிப்போம்

*-பலாலி உயர் பாதுகாப்பு வலய மக்கள் சனாதிபதிக்கு எச்சரிக்கை விடுத்து மகஜர்-*

(யாழ்ப்பாணம்)

**யாழ். வலி கிழக்கு வளலாய், இடைக்காடு போன்ற பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தம்மை சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்காவிட்டால் தொடர்ச்சியான வெகுசனப் போராட்டங்களில் தாம் குதிக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.**

மேற்படி பகுதிகளை கடந்தகால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலம் தம் வசப்படுத்தி வைத்திருக்கும் சிறிலங்காப் படையினர் அப் பிரதேசங்களை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகவும், பிரகடனப் படுத்தி வைத்துள்ளனர்.

பலாலி இராணுவப் படைத் தலைமையக பாதுகாப்பு வலயப் பிரதேசத்தின் ஓர் அங்கமாகவுள்ள மேற்படி பிரதேசங்களில் தம்மைக் குடியமர அனுமதிக்குமாறு மக்கள் விடுத்த கோரிக்கைகள் சிறிலங்காப்படையினரால் நிராகரிக்கப்பட்டு வரும் நிலைமையைச் சுட்டிக் காட்டியே இவ்வாறு அப்பகுதி மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பிரதேசங்களில் தம்மை மீளக் குடியமர அனுமதிக்குமாறு வலியுறுத்தியும் அரசு தமது கோரிக்கைகளை ஏற்கத் தவறின் தாம் தொடர்ச்சியான வெகுசனப் போராட்டங்களில் குதிக்கப் போவதாகவும், எச்சரித்தும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கு அப் பகுதி மக்கள் மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். (33)

-அமெ. இராணுவ வைத்தியக் குழு-

## யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளை முதல் 4 நாட்கள் சத்திர சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க இராணுவ வைத்திய நிபுணர்கள் குழு ஒன்று எதிர் வரும் 09,10, 11,12 ஆம் திகதிகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து பொது மக்களுக்கான நெஞ்சறை சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சத்திர சிகிச்சைகளை மேற் கொள்ளவுள்ளது. அமெரிக்க இராணுவ நெஞ்சறைச் சத்திரசிகிச்சை நிபுணர்கள் குழுவால் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள் நாளை பிற்பகல் 02 மணி தொடக்கம் 04 மணி வரையிலும், 10,11,12 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையிலும், நடைபெறவுள்ளது.

எனவே இருதயம் மற்றும் நெஞ்சறை சம்பந்தப்பட்ட நோய் உள்ளவர்கள் மேற்படி நாட் களில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு வந்து சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

*-த.பு. கழகமூடாக லயன்ஸ் கழகம்-*

## வல்வெட்டித்துறை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரூடாக யாழ். குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை லயன்ஸ் கழகத்தினர் வழங்கியுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நெறிப்படுத்தலின் கீழ் பாதிக்கப்பட்ட பிரதேச பாடசாலைகளான வல்வெட்டித்துறை சிவகுருவித்தியாலயம், ஆழியவளை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை தாளையடி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆகியவற்றிற்கு இக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (33)

## சுனாமியால் பாதிக்கப்பட்டு கவனிப்பாரற்று இருப்பதாக வலிகாமம் மீனவர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் யாழ். குடாநாட்டின் வலிகாமம் கடற்கரையோரப் பிரதேசமும் பலத்த சேதங்களுக்குள்ளாகியிருக்கின்ற போதும் அது குறித்து அரசோ, அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ உரிய கவனம் செலுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கத் தவறிவிட்டன என அப்பகுதி கடற்றொழிலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டைக் கடுமையாகத் தாக்கிய ஆழிப் பேரலையினால் வலிகாமம் கடற்கரையோரக் கிராமங்களும் பலத்த சேதங்களை எதிர்கொண்டன. இதனால் இப் பகுதி மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன, கடற்றொழில் உபகரணங்கள் என்பனவும், கடுமையாகச் சேதமடைந்தும் உள்ளன.

எனினும் இந்த விடயத்தில் அரசோ அல்லது அரசசார்பற்ற அமைப்புக்களோ கவனம் செலுத்தி இப்பகுதி மீனவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்வதற்கான உதவிகளை வழங்கவோ, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கவோ முன்வரவில்லை.

இதனால் இப் பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் தொழில் செய்வதற்கான உபகர ணங்கள் அனைத்தும் அலை யினால் சேதமாக்கப்பட்டிருப்பதனால் கடந்த 26ஆம் திகதி தொடக்கம் இப்பகுதி மீனவர்களில் 95% வீதமானோர் இன்னமும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கவில்லை. எனவே இது குறித்து உரிய தரப்பினர் கவனம் செலுத்தி இப் பிரதேச மீள் கட்டுமானத்திற்கான உதவிகள் வழங்கப்படல் வேண்டுமென அரசாங்கத்திடம் அப்பகுதி மீனவர்சங்கங்கள் கோரியுள்ளன. (32)

### நிவாரணம் வழங்கல்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு மீனவர்களுக்கு ஆறு மாதகாலமாக வழங்கப்படாதிருந்த நிவாரணம் தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதி மீனவர்களுக்கு சூரிய கதிர் இராணுவ நடவடிக்கைக்காகவழங்கப்பட்ட நிவாரணம், கடந்த ஆறுமாத காலமாக அரசாங்கம் வழங்காதிருந்தது. இவ் நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. (45)

## மட்டுவில் வடக்கு வயல் நிலங்களில் மிதிவெடிகள் பயிர் செய்ய முடியாது விவசாயிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சியில் உள்ள மட்டுவில் வடக்குப் பகுதி வயல் நிலங்களில் சிறிலங்காப் படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் இன்னமும் அகற்றப்படாததினால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலஇராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்காகப் படையினரால் புதைக்கப்பட்ட இவ்வாறான மிதிவெடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி இப்பகுதி விவசாயிகள் உரிய அரச அதிகாரிகளிடம் கோரிய போதும் இது வரையில் உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் தமது நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தென்மராட்சி மட்டுவில் கிழக்கு பிரதேசத்தில் உள்ள கமலாசினி மகாவித்தியாலயத்திற்கு அருகில் சிறிலங்கா படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்றும் பணிகளை "ஹலோட் ரெஸ்" நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.மேற்படி பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதி வெடிகள் அகற்றப்படாமையால் அப்பகுதி மக்களும் மாண வர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையிலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (33)

## தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தமான கூட்டம் இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விவசாயம், கால்நடை, தென்னை அபிவிருத்தி, பனை அபிவிருத்தி,சுகாதாரம், கல்வி சூழல் பாதுகாப்பு. வீதி அபிவிருத்தி நீர்ப்பாசனம், மின்சாரம், வீடமைப்பு, கிராமஅபிவிருத்தி, சிறுகைத்தொழில், கூட்டுறவு, கடற்றொழில், மீளக்குடியமர்வு சம்பந்தமாய் இக்கூட்டத்தில் கருத்துப்பரிமாறப்படவுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள் தவறாது சமுகமளித்து இப் பிரதேச முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு நல்குமாறும் தென்மராட்சி பிரதேச செயலாளர் கோரியுள்ளார். (28)

## வடமராட்சி வலயமாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன

-கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு-

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வே.த.செல்வரத்தினம் தெரிவித்தார்.சீருடைகள் வந்த தினமே வடமராட்சி கிழக்கு பாடசாலை மாணவர்களுக்கு உடனடியாக சீருடைகள் வழங்கப்பட்டதாகவும் அதனையடுத்து வடமராட்சி வடக்கு பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மாணவர்களின் கல்வியை அவசரக்கருத்திற்கொண்டு நலன்புரி நிலையங்களாகச் செயற்படும் பாடசாலை மாணவர்களுக்கான ஆலய மண்டபங்களிலும், பொது கட்டடங்களிலும், நிறுவனக்கட்டடங்களிலும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (45)

## வடமராட்சி வடக்கு நலன்புரி நிலைய குடிநீர்விநியோகத்தைச் சீராக்குக

*-இடம்பெயர்ந்த மக்கள் கோரிக்கை*

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி வடக்குப் பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந் தோர் நலன்புரி நிலையங்களுக்குச் சீரான குடிநீர்விநியோகம் இடம் பெறுவதில்லையென அங்கு தங்கியுள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கி இருக்கும் இவ்வாறான அகதி முகாம்களுக்கு உரிய நேரங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப் படாமையால் அங்கு தங்கியுள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். (33)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு த.ச.பொ.அபிவிருத்தி நிறுவனம் உதவி

(யாழ்ப்பாணம்)

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொருள் உதவியினை பாதிக்கப்பட்டவர்களுக்கான நடவடிக்கை செயலணிக் குழுவின் மருதங்கேணி செயலகத்தில் நேற்று கையளித்துள்ளது. இதில் கீழ்வரும் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

நுளம்புவலைகள், ஆண், பெண்களுக்கான சகலவகை உடுப்புக்கள்,குழந்தைகளுக்கான ஆடைகள், சூப்பிப்போத்தல்கள், பேபிக்குளோன், பவுடர், பால்மா வகைகள், பிஸ்கற், சகல வயதினருக்குமான பாதணிகள், படுக்கை விரிப்புகள் (பெற்சீட்) சவற்கார வகைகள், மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள், சுடுநீர்ப்போத்தல்கள், பெற்றோல் மாக்ஸ்கள்,சாப்பாட்டுத தட்டுகள், குடிநீர் கோப்பைகள் ஆகியனவே வழங்கப்பட்டன. (கப்)

# 06 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்




தோற்றம்:- 06 - 07 -1980
வீரச்சாவு:- 08- 02 -1999

கப்டன் நரேஸ்வேலவன்
மகேந்திரன் ஞானச்செல்வன்

சம்பவம்-கச்சதீவு கடற்பரப்பில்
ஏற்பட்ட மோதலில்

சொந்த முகவரி:-உப்பளம் ஆனையிறவு
தற்காலிக முகவரி:-பொன்னம்பலம்
வைத்தியசாலை முன்பாக கிளிநொச்சி

தானைத்
தலைவனின்
வழியினிலே தளராத
துணிவோடு
சென்றவனே
கடலலையோடு
சங்கமமாகி
ஆறாண்டுகள்
ஆகிவிட்டது
வேலவனே நீ எம்மை
விட்டுப் பிரிந்தாலும்
உன் நினைவு என்றுமே
அகலாது



தோற்றம்:- 18 - 12 - 1970
வீரச்சாவு:- 07- 07 - 1987

வீரவேங்கை நரேஸ்
மகேந்திரன் மணிச்செல்வன்

சம்பவம் -வடமராட்சி
மண்டானில் ஏற்பட்ட மோதலில்

தகவல்
ம.சுதாஸ்
சகோதரன்

(5702)

# 45 ஆம் நாள் நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1982 | 2004 |
| 09 | 12 |
| 24 | 26 |

அமரர்
**அன்னலிங்கம் கயல்விழி**
கள்ளப்பாடு-முல்லைத்தீவு

ஒரு கொடியில் பூர்த்த
இரு மலருள் ஒன்றானவளே!
நேற்றுவரை எம்மோடு உடனிருந்து
இன்று மட்டும் எம்மைத் தவிக்கவிட்டு
எங்கு சென்றாய் செல்வமே!
எத்தனை நாட்கள்தான் சென்றாலும்
உன் நினைவு என்றும் எம்மை விட்டு
நீங்காது.

அன்றைய தினம் எம் செல்வத்துடன் இறைபதம் அடைந்த அனைத்து உறவுகளின் ஆத்மாக்களும் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
"ஓம் சாந்தி" "ஓம் சாந்தி" "ஓம் சாந்தி"

உன்பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அண்ணா,
உற்றார், உறவினர்கள்.

தகவல்:-
சுப்பிரமணியம் அன்னலிங்கம்

(5676)

# 45 ஆம்நாள் நினைவு

பிறப்பு
27. 09. 1983

வீரச்சாவு
26 12 2004

## லெப்டினன்ட் அமுதருவி (தவராசதுரை வாகினி உடுத்துறை)



உடுத்துறை மண்ணில்
உதயமானவளே - எம்
அன்புக்குரிய அமுதருவியே!
சுனாமிப்பேரலை
உன்னை அணைத்ததோ
மண்ணுக்காய் உயிர்நீத்த-
அண்ணனுடன்
நீயும் சேர்ந்து துயில்கின்றாயே
மருத்துவப் பிரிவினிலே - உன் பணியை
வீறுடனே துல்லியமாக வளர்த்தாயே
புன்சிரிப்புடனும் சலிக்காமல்

ஓயாது செய்யும் - உன் பணி
எல்லோர் மனதையும் கொள்ளை
கொண்டதுவே

என்றும் உன் நினைவுடன் எம்பணி தொடர்கின்றோம்

இந்நாளில் சாவடைந்த மக்களை நினைவு கூருகின்றோம்

போராளிகள், பணிப்பாளர், பணியாளர்கள்,
தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை,
தமிழீழ சுகாதார சேவைகள்,
விடுதலைப்புலிகள் மருத்துவப்பிரிவு,
தமிழீழம்.

(5704)


# 45ஆம் நாள் நினைவில்....



ஜேம்ஸ் டினுசியா
26-08-98



ஜேம்ஸ் டொனாறிறதி
29-03-72



ஜேம்ஸ் டினுஷன்
03-08-99



சந்தனகுமார் தர்ஷன்
08-06-98

கதிரவன் வரவில்
மலர்ந்த காலையில்
ஆர்த்தெழுந்த........
ஆழிப்பேரலையே - நீ
பொங்கி ராட்சத அலைகளை - வீசி
எம் ஐவர்களின்
உயிர்களைப் பறித்தாயே
கூடிவாழ்ந்த சொந்தங்கள்
இன்று எம் அருகில்
இல்லையே..........
துள்ளித்திரிந்த மழலைகளும்
கூட எம் அருகில் இல்லையே......
மண்ணில் ஒன்றாக வாழ்ந்து
விண்ணில் ஒன்றாக வாழச்சென்ற
உங்கள் நினைவுடன் என்றும்.....




சந்தனகுமார் தர்சியா
28-06-99

26-12-04

சந்தனப்பிள்ளை கொன்சன்றைன்
செம்பியன்பற்று வடக்கு

(5701)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:-03.05.1978
கடலின் மடியில்:-26.12.2004

## திருமதி தங்கரூபன் றாஜினி

உடுத்துறை, வடக்கு தாளையடி


ஆழக்கடலாய் நீயிருந்தும்
அன்னையென மதித்தோமே-ஆழிக்கடலே
நீ அழைத்துச் சென்றாயே-எம் உறவை
இதுவா எம் கடலன்னையின் அரவணைப்பு
எம் உறவின் உயிர்ப் பிரிவால்
கண்ணீர்த்துளிகள் எல்லாம் கருகிப்போனதிங்கே
கதிகலங்கி நிற்கின்றோம் தனியாகத் தவிக்கின்றோம்
கண்மணியே உன் உருவைத் தேடுகிறோம்-நின்
நினைவால் என்றும் வாடுகிறோம்-உம்
ஆத்மா சாந்திக்காக என்றும் இறைவனை
வேண்டுகிறோம்

எனது மனைவியின் இறப்புச் செய்தி கேட்டுப் பல வழிகளிலும் உதவி செய்து துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இவரின் ஆன்ம சாந்திக்காக 08.02.2005 அன்று இவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்
கணவன், அன்பு மகள்

(5650)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



## சபேஸ் தீபா
## (விஜயமலர்)

அன்னை மடியில் 02-02-1981

கடல் அன்னை மடியில் 26-12-2004

வெண்ணிலாவின் ஒளியைப்போல பாசத்துடன் இணைந்து நேசத்திலே கோலார்த் தங்கமாக வாழ்ந்து அன்பினை அள்ளி சொரிந்து பாரினிலே பாசப் பாதையைக் காட்டி உயிருடன் உறவாடி உள்ளத்தில் சிலையாகி இன்று என்னைத் தவிக்க விட்டுவிட்டு இவ் உலகை விட்டுச் சென்றாயோ? என் உயிரே அந்நேரம் நீ எவ்வளவு துடிதுடித்திருப்பாய் சுனாமி பேரலையாக உன் இறுதி மூச்சு, சொந்தம் சொல்ல நானிருந்தும் தவிக்க விட்டு தனியாகச் சென்றாயோ தீபா உன் உடல் தான் என்னை விட்டுப் பிரிந்ததே ஒழிய உயிர் உறவாடிக் கொண்டுதான் இருக்கின்றது. என் உள்ளத்தில் நித்தமும் நீ வந்து செல்கின்றாய் உன்னை நினைக்கும் போது உன் புன்சிரிப்பும் உன் குறும்புத் தனமும் தான் என் கண் முன்னே தெரிகின்றது. என்னை நீ பாசத்துடன் அழைக் கும் அன்புக் குரல் என் காதினிலே கேட்ட வண்ணம் உள்ளது. ஒரு நிமிடம் கூட பிரிந்து வாழ முடியாத என்னால் உள்ளத்தில் உன் நினைவுகளை இதயச் சுமைகளாகத் தாங்கி நினைவில் மட்டும் ஒன்றாக வாழ்கின்றேன். உள்ளம் உன்னிடமே அடைக்கலமாகின்றது. தீபா நீ எங்கே? உன்னோடு நான் வாழ்வதற்கு கட்டிய மனக்கோட்டை என் கண் முன்னே மணல் கோட்டையாக கரைந்து வாழ்க்கை இருளாக்கியது. உன் நினைவினை வார்த்தைகளால் வடிக்கவே முடியவில்லை. என் வாழ்வின் வசந்தம் யாவும் மண்ணுக்குள்ளா எழுதப்பட்டது.

இவருடன் 26-12-2004 அன்று இவ்வுலகைவிட்டுச் சென்ற அம்மாவான இராஜேஸ்வரி , அத்தான் யோசான், பெறாமகன் சங்கீத் ஏனைய அனைவரினதும் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன்

உன்னால் உன்னுடன் வாழும்

**வே. சபேஸ் (சசிகரன்)**

(5674)

# 45 ஆம் நாள் நினைவலைகள்



அன்னையோடு 09.05.1975

ஆழ்கடலோடு 26.12.2004

## ரவிச்சந்திரன் தெய்வமனோகரி

நிலவு ஒன்று மறைந்தது
எம் கனவுகள் யாவும் கலைந்தது
எம் இதயவானில் அழகு நிலா எங்கே?
காலனவன் கடல் அன்னை வடிவில் வந்ததுவோ?
அன்னை நீ இன்றி அழும் குழந்தைகள்
றஜீத் தனுஷன் தரணியில் மீண்டும்-நீ
வருவாயா? தாயாக?
யாரை நான் காட்ட கடலையா?
தண்ணீரில் தாமரையா என்வாழ்வு?
கண்ணீரில் கலங்குகிறேன்-என்னவளே
தண்ணீரில் சென்று-நீ
மண்ணோடு மறைந்தாலும்
எம் மனதோடு நீ வாழ்வாய்.

**கணவன், பிள்ளைகள், உறவினர்கள்**

(5636)

# 45ஆம் நாள் நினைவலையும் அந்தியேட்டியும்

பிறப்பு 17 - 07 - 1975



இறப்பு 26 - 12 - 2004

## திருமதி. விஜயகுமாரி-பாலகிருஸ்ணன்
## கள்ளப்பாடு முல்லைத்தீவு

(நிர்வாக அலுவலர் முல்லை மக்கள் நலன்புரிச் சங்கம்)

பேரலையில் உனைப் பிரிந்ததனால்
தீரவில்லையே இன்னும் எங்கள் சோகம்...!
ஊரே அலையாய் அழித்ததனால்
ஆறலையே இன்னும் உந்தன் நினைவு...!
சித்திரை நான்கில் மழலை வருமென்பாயே
நித்திரையில் இன்னும் நீதானே வருகிறாய்...!
பிரசவ நாளையெண்ணியே
உதிர்ந்த உந்தன் வார்த்தைகள்
இன்னும் இன்னும் எங்கள் செவிகளில்...!
மானிடப் பிறப்பில் மறு பிறப்பென்றிருந்தால்
மீண்டும் உனைக் காண்போம்
சேர்ந்து வாழ்ந்திடுவோம் ஒன்றாய்..!.
விஜயா..! பேரலையில் உன்னோடு உன் பெற்றோரையும்
தொப்புள்கொடி இரு உறவுகளையும்
உற்றார், உறவினர், பலரையும் இழந்தோம் -மீண்டும்வந்து
இன்று தவிக்கின்றோம்...! கண்முன்னே
ஆழிப் பேரலையில் மறைந்தோரே -எங்கள்
விழித் திரையில் நீங்கள் இன்னும் மறையவில்லை
ஓ...உறவுகளை இழந்து தவிக்கும் எங்கள்
அன்புக்குரியவர்கள் அனைவருக்கும்
எங்கள் அனுதாபங்கள் உரித்தாகட்டும்...!

உங்கள் பிரிவால் துயருறும்
கணவர் மற்றும், பாவு குடும்பத்தினர்
9ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

தகவல்
கணவன்
பாலகிருஸ்ணன்

(5646)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



## துரைசிங்கம் சரோசா

வத்திராயன் வடக்கு தாளையடி.

தரணிக்கு 10-02-1956

தண்ணீரின் தாகத்திற்கு 26-12-2004

கடலுக்குள் நாம் மூழ்கி
முத்தெடுத்த காலம் போய்
நெஞ்சுக்குள் கடல் புகுந்து
முத்தெடுத்த கலி காலமிது
தேட முடியாத அன்னை என்னும் உறவே
தேடித் தேடி அலுத்துவிட்டோம்.
தேவனடி நீ சேரவென்றே
தேவனடி போற்றுகிறோம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி!

ஆழிப் பேரலையின் கோரப் பசியால் வடமராட்சிக் கிழக்கு வத்திராயன் பகுதியில் இரையாகிப்போன எமதன்னையின் துயரச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவிகள், ஆறுதல்கள் புரிந்த அனைவருக்கும் துயரத்தோடு கூடிய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, 12-02-2005 (சனி) புதுக்குடியிருப்பு உலகளந்த பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

பிரிவுத்துயருடன்

**கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், அன்னை, மருமக்கள்.**

த.மு.
உலகளந்த பிள்ளையார் கோவில்,
புதுக்குடியிருப்பு.

(5642)

# ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

# அமைதியாய் இருந்து கடல் ஏன் இப்படி கோரமாய் எழுந்தடித்து அவலத்தைத் தந்தது

**முல்லைத்தீவில் உள்ள செந்தளிர் சிறுவர் இல்லத்தை சுனாமி பேரலைகள் தாக்கிய சமயம் அங்கிருந்த பிள்ளைகளைக் காப்பாற்றுகின்ற நடவடிக்கையில் ஈடுபட்டு சிலரை உயிர்காத்த அதே வேளை பலர் உயிரிழந்த சம்பவத்தை நேரில் பார்த்த இல்லத்தின் பணிப்பாளர் பிரமிளா அங்கு எப்படிக்கடல் வந்தது என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங் களைப் பகிர்ந்து கொள்கிறார்.**



## பகுதி -18

**அன்று** ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடமும் இல்லை. அதால கொஞ்சப் பிள்ளைகள் விடுமுறையில் வீட்டுக்குப் போய் விட்டார்கள். ஏனையவர்கள் எல்லோரும் இல்லத்தில் தான் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் காலைச் சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு ஒவ்வொருவரும் தத்தமது வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

இப்படி இருக்க நான் எனது அலுவலகத்தில் இருந்து அன்றைய வேலைகளை செய்து கொண்டிருந்தேன். எனக்கு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. எங்கள் பிள்ளைகளும் அவர்களைப் பராமரிக்கின்ற அம்மாவும "அலை வருது" எண்டு பெரிதாகக்கத்தி னார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்றாலும் ஏன் கத்துகிறார்கள் என்பதை பார்ப்பதற்காக வெளியில் வந்தேன்.

என்ன பயங்கரம் கடல் எங்கள் இல்லத்துக்குள் வந்துவிட்டது. வெளியால் நிண்ட பிள்ளைகள் எல்லாரும் பெரிய வீட்டுக்குள் ஓடிக்கொண்டிருந்தனர்.நான் உடனே ஆத்துக்குப் பக்கத்தில் சின்னப் பிள்ளைகள் இருந்த அறைக்கு ஓடுவோம் என்று வெளிக்கிட அந்தப் பிள்ளையளைப் பராமரிக்கிற அம்மா "ஐயோ இந்தப் பிள்ளை களை எப்பிடி காப்பாற்றப் போறன்" என்று கத்தியபடி அவ்வளவு (எட்டு) சின்னப்பிள்ளைகளையும் அணைத்தபடி வாசலில் விழுந்தார். அதைப் பார்த்து விட்டுநான் அங்கதான் போனேன்.

ஆத்துக்குப் பக்கத்தில இருந்ததால அந்த அறை முழுக்கத் தண்ணி மூடிவிட்டது. அதால அங்க போக முடியாமல் இருந்தது. அந்த அம்மாவும் பிள்ளைகளும் தப்பவும் இல்லை. அவவின்ர பொடியைக்கூட நாங்கள் எடுக்கவில்லை. தண்ணி கூடிவிட்டது. அதனால் எங்கயுமே போக முடியாமல் போய்விட்டது. எனக்கு எதுவுமே புரியாமல் இருந்தது.

நேசறி றூம் இருக்கிற பக்கம் தான் போகக்கூடியதாக இருந்தது. அதால அந்தப் பக்கம் போய் அங்க இருக்கிற பிள்ளையளையாவது காப்பாத்துவம் எண்டு அந்த அறைக்குள் ஓடிப்போனேன். என்னவோ தெரியவில்லை. அதற்குள் மட்டும் தண்ணி குறைவாக இருந்தது. அதனால் நாங்கள் தண்ணி உள்ளுக்குள் வராமல் கதவைச் சாத்திப்பிடித்திருந்தோம். இப்படி இருக்க வெளியால இருந்து பிள்ளை ஒன்று கத்த நாங்கள் கதவைத் திறந்தோம். அந்தப் பிள்ளையையும் சேர்த்து தள்ளிய படி கடல் வேகமாக அறைக்குள் வந்துவிட்டது.

தண்ணி வந்த வேகத்தில் பிள்ளையள் எல்லாத்தையும் சுத்தி சுழட்டினபடி அறையளுக்குள் கொண்டு போனது.அந்த அறையளுக்குள் விடுமுறையில் வீட்டுக்குப் போன பிள்ளைகளின் கட்டில்கள் எல்லாம் ஒன்றுக்கு மேலாக அடுக்கி இருந்தோம். அதை விட அலுமாரிகள் எல்லாம் இருந்தது. தண்ணி சுத்திக்கொண்டு வந்த வேகத்தில் அதுகள் எல்லாம் நிலத்தில பொறிஞ்சு விழுந்து போச்சுது. அதால தண்ணியோட அடிபட்டு அதுக்குள்ள வந்த பிள்ளையள் எல்லாம் நசிபட்டுச் செத்துப் போச்சுதுகள்.

இப்படித் தண்ணி மட்டம் கூடிக் கொண்டு போக பிள்ளையள் எங்களின் கண்முன்னாலே தத்தளித்துக்கொண்டிருந்திச்சினம். இத்தனை காலமாக நாங்கள் கஷ்ரப்பட்டு தூக்கி வளர்த்த பிள்ளையள் எல்லாம் இப்படிக் கிடந்து தத்தளிக்கிறதப் பார்க்க ஏலாமல் இருந்தது. நாங்களும் அவர்களுடன் சேர்ந்து தத்தளிச்சம். யாரை யார் காப்பாற்றுறது . ஒன்றுமே தெரியேல்ல. அப்படி இருந்தும் சில பிள்ளைகளைத் தூக்கி சுவரில ஏத்திவிட்டம். இப் படியே கொஞ்சப் பேரை வீட்டுச் சுவரில் ஏத்திவிட் டுட்டம்.

பிறகுதண்ணி இன்னும் கூடிக் கொண்டு வந்தது. என்ன செய்யிறது நுளம்பு வலை கட்டுறதுக்கு முகட்டில இருந்து கயிறு கட்டியிருந்தது. அந்தக் கயிறுகள் கீழே தொங்கிக்கொண்டிருந்தது. அதில பிடிக்கிறதுக்கு சில பிள்ளைகள் முயன்று கொண்டிருந்தனர். ஆனால் தண்ணியின் வேகத்தில கைநழுவிக் கயித்தைப் பிடிக்க ஏலாமல் போச்சினம். அப்பிடி அம்பிட்ட பிள்ளையள கயித்தில் பிடிச்சு விட்டம். இப்படியும் சுவரில ஏத்தினதுமாக ஒரு பதினைஞ்சு பேருக்குட்பட்ட



பிள்ளைகள் தப்பீட்டினம்.

பிள்ளைகள் தத்தளிச்சுக்கொண்டிருக்கேக்க என்ன செய்யிறது எண்டு தெரியேல்ல கடல் மட்டம் திடீர் எண்டு குறையிறதும், கூடுறதுமாய் இருந்தது. அதால கடல் குறையேக்குள்ள நாங்கள் பிள்ளையள காப்பாற்றுறதும் பிறகு தண்ணி கூட அதுக்குள்ள தத்தளிக்கிறதுமாக கொஞ்ச நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

தண்ணி வத்தின கொஞ்ச நேரமும் தான் நாங்கள் பிள்ளைகளை காப்பாற்றினோம். என்ன செய்யமுடியும். அரவணைத்து வளர்த்த பிள்ளைகள் எல்லாம் தண்ணீருக்குள் தத்தளித்து கண்மூடி விட்டார்கள். அந்த அறைக்குள் நின்றவர்கள் அந்தப்பாடு பட்டார்கள். வெளியால நின்றவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள். வெளியால் உள்ள மற்ற றூமுக்குள் எல்லாத்துக்கையும் நிண்ட பிள்ளைகள் என்ன ஆகி இருப்பார்கள்.

இப்படி யோசித்த படி இருக்க மீட்பு அணிகள் வந்து எங்களை காப்பாற்றினார்கள். அவர்கள் வந்ததும் நாங்கள் வெளியால் வந்தோம். மற்றப் பிள்ளைகளை எல்லா இடமும் தேடினோம். ஒருசிலர் மரங்களின் மேல் இருந்தார்கள். வேறு எவரையும் காணவில்லை. என்ன கொடுமை அத்தனை உயிர்களுக்கும் என்ன நடந்திருக்கும். நினைக்கவே பயமாக இருந்தது. எங்கள் இல்லம் எல்லாமே உருவம் மாறிச் சிதைந்து போய் இருந்தது. அங்கு சடலமாகக் கிடந்த எங்கள் பிள்ளைகளின் உடல்களை எல்லாம் பத்திரமாக எடுத்து வீட்டடியில் வைத்துவிட்டு அவர்களையும் தூக்கிக் கொண்டு தான் நாங்கள் போகப்போறோம் என்று எங்களை மீட்க வந்தவர்களுக்குச் சொன்னோம். எப்படி அந்தப்பிஞ்சு உடல்களை விட்டுவிட்டு கடந்து போகமுடியும். மனம் கேட்கவே இல்லை. எங்களை மீட்க வந்தவர்கள் சொன்னார்கள் "அக்கா இப்ப திரும்பவும் கடல்வரப்போகுது உடனடியாகத் தப்பி இருக்கிற ஆக்களைப்பற்றி யோசியுங்கோ பிறகு மற்றவர்களைப்பற்றி யோசிப்பம்" என்று சொல்லி எங்களை அந்த இடத்திலிருந்து முள்ளியவளைக்குக் கூட்டிக் கொண்டு போய்விட்டார்கள்.

தப்பியவர்களை முள்ளியவளைக்குக் கொண்டு போய்விட்டு விட்டு நான் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குப்போய் எங்கள் பிள்ளைகள் யாராவது இருக்கிறார்களா? என்று பார்த்தேன். எவரும் இல்லை. உடனடியாகவே வைத்தியசாலையில் இருந்து இரண்டு மணிக்குச் செந்தளிர் நோக்கி வந்தேன். வட்டுவாகலில் வைத்து போகஏலாது என்று மறித்துவிட்டார்கள். அதால நான் வட்டுவாகல் பாலத்துக்குப்பக்கத்தில நிண்டு உழவுஇயந்திரத்தில வந்துகொண்டிருந்த பொடியள் எல்லாத்தையும் ஒவ்வொன்றாய்ப்பார்த்தேன்.

அந்தப் பொடியள் ஒண்டுமே அடையாளம் காண ஏலாதமாதிரி இருந்தது. அதால எங்கட பிள்ளையள் எண்டு கண்டுபிடிக்க ஏலாமல் இருந்தது. பிறகும் போய் "எங்கட பிள்ளையளைப் பார்க்கப் போறம் விடுங்கோ" என்று கேட்டோம்.நாங்கள் நிக்கவே அலை பெரிசாய் வந்து கொண்டிருந்தது. அதால அவையள் எங்களை உள்ளுக்குப்போகவிட மாட்டோம் என்றார்கள்.

அத்துடன் வட்டுவாகலில் இருந்து வெளிக்கிட்டு புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு இரவு ஆறு அரைபோல நானும் சிவாசினி அக்காவும் போனோம். அங்க போய்ப்பார்த்தால் எண்ணிப்பார்க்க ஏலாதமாதிரி நிறைய சடலங்கள் இருந்தன. அதுக்குள்ள ஒவ்வொன்றாய்த் தேடினோம். அத்தனையும் தேடிமுடிந்த போது அபிராமி என்கின்ற இரண்டரை வயதுப்பிள்ளையின் சடலம் கிடந்தது. அந்தப்பிள்ளையின் முகத்தில் மாத்திரம் ஒரு சின்னக்காயம் இருந்தது. வேறு காயம் எதுவுமே இல்லை. இப்படியே பார்த்து எடுத்து அடையாளப் படுத்திவிட்டு வேற ஆக்களைப் பாத்து எடுக்கச்சொல்லிப்போட்டு எட்டு மணிக்கு முள்ளியவளை பள்ளிக்குடத்துக்குப் போய் ஏழுபேரின் சடலங்களைத்தேடி எடுத்தோம். அவற்றையும் அடையாளப்படுத்தி எடுத்துக் கொண்டு இரவு ஒரு மணிக்கு வள்ளி புனத்துக்கு நாங்கள் வளர்த்த பிள்ளையள சடலமாக கொண்டு போனோம்.,

எங்கள் இல் லத்தில் 175 பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் 22 பேர் விடுமுறையில் போயிருந்தார்கள். அன்றைய தினம் 153 பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் இப்போது 31பேர் தப்பியிருக்கிறார்கள் இவர்களில் 14பேரின் சடலங்களை உடனடியாக அன்றை தினமே எடுத்தோம். பிறகு மீதி 16 பேரின் சடலங்களை எடுத்து மொத்தமாக 30 பேர் இறந்ததை உறுதிப்படுத்தி விட்டோம். இப்போது 92 பேர் என்ன ஆனார்கள் என்பதே தெரியவில்லை. அவர்களை இப்போதும் தேடிக்கொண்டிருக்கிறோம்.

அந்தச்சம்பவம் நடந்து இன்று எத்தனை நாட்கள் கடந்து போய்விட்டது. அதில் இருந்து தப்பிய பிள்ளைகள் இரவில் பயந்து எழும்பி அழுகிறார்கள். கனவு கண்டு கத்துகிறார்கள். என்ன செய்வது அதை நினைக்கவே பயமாக இருக்கிறது. எங்கட பிள்ளைகள் கனபேரை இழந்து போனோம். ஒவ்வொரு பிள்ளையையும் நாங்கள் மோசமான நிலையில் ஒவ்வொன்றாய் தேடி எடுத்து எப்படி எல்லாம் பராமரித்து வந்தோம். அந்தப்பிள்ளைகளை வளக்கிறதுக்கு நாங்கள் பட்ட கஸ்ரங்கள் யாருக்குத் தெரியும். அந்தப்பிள்ளைகளை அமைதியாய் இருந்த கடல் பொங்கி வந்து கொஞ்சநேரத்தில அடிச்சுக்கொண்டு போச்சுது. என்று தன் பிள்ளைகளை நினைத்து சோகமானார்.

அடுத்து முல்லை நகரில்மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீட்புப்பணியாளர் தான் அந்தப் பகுதிகளில் கண்ட துயரமான சம்பவங்களையும் விபரிக்கின்ற அதேவேளைமுல்லைத்தீவு எப்படிகாட்சி தந்தது. என்பது பற்றி அவர் எங்களுடன் பகிர்ந்து கொண்டவிடயங்களை அடுத்த பகுதியில் உங்களுக்குத்தருகிறோம்.

**அ.லோகீசன்**

**தொடரும்**



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

இந்தச் சிறுவனைப் பார்த்ததும் பள்ளிக்கூட மாணவன் போல் தெரிகிறதா... நீங்கள் ஊகித்தது சரிதான், ஆனால், இவனிடம் ஒளிந்து கிடக்கும் திறமையைக் கண்டு இன்று உலகமே அதிசயித்து வருகிறது. யார் இந்த சிறுவன்? அப்படி என்னதான் சாதித்து விட்டான் என்கிறீர்களா..?

பிரேசிலில் உள்ள கேம்போமோரா பகுதியில் வசிக்கும் இந்த சிறுவனின் பெயர் ஜீன்கார்லோஸ் சேரா. (வயது 09) பிரேசில் நாட்டில் இப்போதைய கால்பந்து ஹீரோ இவன் தான். கால்பந்து மைதானத்தில் இறங்கிவிட்டால் இவனை யாராலுமே கட்டுப்படுத்த முடியாது. முன்னணி நட்சத்திர வீரர்கள் போல லாவகமாக பந்தை கடத்திச் செல்வது, எதிரணி வீரர்களை ஏமாற்றி 'மின்னல் வேகத்தில்' கோல் அடிப்பது என அசத்தி வருகிறான். பிரேசிலில் உள்ள சில உள்ளூர் அணிகளுக்கு எதிராகவும் இப்போது விளையாடி வருகிறான் என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா....!

இதைவிட ஆச்சரியம் என்னவென்றால், ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிளப் அணிகள் இவனை பல கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்ய வரிசையில் காத்திருக்கின்றன. மான்செஸ்டர், யுனை டெட், ஏ.சி.மிலன், ரியல்மாட்ரிட் போன்ற அணிகள் பல கோடி ரூபாவை கையில் வைத்துக் கொண்டு இவனை ஒப்பந்தம் செய்யத் துடிக்கின்றன. விசேட பயிற்சிகளும் அளிக்கத் தயாராக இருப்பதாக தொிவிக்கின்றன. தற்போதைய நிலையில் சேராவை அனுப்ப பெற்றோர்கள் யோசித்து வருகின்றனர். பீலே, ரொனால்டோ, ரிவால்டோ போன்ற நட்சத்திரக் கூட்டத்திற்கு பிறகு ஒரு அற்புத ஹீரோ பிரேசிலை அலங்கரிக்கப்போகிறார் என்று உலக நாடுகள் இந்தச் சிறுவனைப் பாராட்டி வருகின்றன. கிளப் அணிகள் போல வேறு நாடுகள் ஆசை காட்டி சேராவை அழைத்துச் சென்று போய் விடுமோ என்று பிரேசில் அரசே கவலைப்படுகிறதாம்...! இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்வது என்கிறீர்களா...



தென்னாபிரிக்க சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி ஏழு போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது.

ஏற்கனவே, அவர்களது சொந்த மண்ணில் மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரையும் கைப்பற்றி தன்னையும் ஒரு வலிமை மிக்க அணி என்பதை நிரூபித்துள்ளது.

இது வோகனின் தலைமைக்கு கிடைத்த பலமாக அமைந்ததுடன் அவர் தலைமைக்கு உரித்தானவர் என்பதையும் உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில், இங்கிலாந்து அணியில் பல முன்னணி வீரர்கள் காயமடைந்துள்ளதும், களைப்படைந்துள்ளதும் வோகன் தலைமைக்கு சங்கடமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, அணிக்கு இக்கட்டான நேரங்களில் கைகொடுப்பவரும் சகலதுறை வீரருமான அன்ரூபிளின்டொப் காயமடைந்துள்ளமை வோகன் தலைமைக்குப் பெருத்த இழப்பாகும். இவரைவிட ஹார்மிசன், அன்ரூஸ் ரோஸ் போன்றோர் களைப்படைந்துள்ளமை இங்கிலாந்தின் வெற்றிப் பயணத்தில் தடங்கல்களை ஏற்படுத்துமோ என்ற அச்சத்தை வோகனுக்கு ஏற்படுத்தியுள்ளது.



## தலைமை உனக்கே

இதனால் புதுமுகங்களை அணியில் இணைக்க வேண்டிய கட்டாய நிலைக்கு இங்கிலாந்து அணி சென்றுள்ளது. இது சாதகமான ஒன்றாக ஓரிரு போட்டிகளில் அமைந்தாலும் அனுபவம் வாய்ந்த தென்னாபிரிக்காவை அதன் சொந்த மண்ணில் சமாளிப்பது என்பது கடினமான ஒன்றாகவே இருக்கும்.

இதன் ஆரம்பமாக நான்காவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து 108 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்ததைக் குறிப்பிடலாம். இது ஒரு வேளை இங்கிலாந்து ஒரு நாள் தொடரை இழக்கும் நிலையைக்கூட ஏற்படுத்தலாம். ஏனெனில், தென்னாபிரிக்காவின் தொடர்ச்சியான சரிவுக்கு முடிவு கட்ட மேற்படி வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா புதுவேகம் பெறலாம்

இதற்கு அவ் அணியின் அதிரடி வீரர் கிப்ஸ் தனது வழமையான ஆட்டத்துக்கு மீண்டும் திரும்பியுள்ளமை அவ் அணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இது வெற்றி பெறுவதற்கு பெரிதும் உதவும்.

இந்த நிலையில், தென்னாபிரிக்க சுற்றுலாவை புதுமுக வீரர்களுக்கு பயிற்சிக் களமாகப் பயன்படுத்தும் இங்கிலாந்து இதில் எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இத்தொடர் எப்படி அமைந்தாலும் வோகன் தலைமைக்கு சிறிது காலத்துக்கு அச்சுறுத்தல் இருக்காது என்பதை மட்டும் துணிந்து கூறலாம்.



ஆசிய நாடுகளின் கிரிக்கெட் அணிகளில் பாகிஸ்தான், சிறிலங்கா, இந்தியா ஆகிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன. கடந்த வருடத்தில் இவை ஒவ்வொன்றும் ஒரு தொடரையாவது கைப்பற்றின. ஆனால் ஆசிய வலயத்திலுள்ள பங்களாதேஷ் அணி அதன் வரலாற்றில் 2004 வரை ஒரு தொடரையாவது கைப்பற்றவில்லை மாறாக அது பல படுதோல்விகளையே சந்தித்தது.

இதனால் அந்த அணிக்கு வழங்கப்பட்ட டெஸ்ட் அந்தஸ்தும் பறிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் நிலவியது. அத்துடன் இந்த அணியுடனான போட்டிகளில் பங்கேற்கும் ஏனைய அணியினருக்கும் மற்றும் ரசிகர்களுக்கும் ஓரளவு மனவுளைச்சலையே ஏற்படுத்தியிருக்கும்.



## முயன்றால் முடியும்

ஆயினும் பங்களாதேஷ் அணிக்கு வட்மோர் பயிற்றுவிப்பாளராக வந்த பின்னர் அவ்வணி படிப்படியாக தலை நிமிரத் தொடங்கியுள்ளது. இது கடந்த வருடம் நடைபெற்ற ஆசிய கிண்ணப்போட்டிகளின் போது புலப்படத் தொடங்கியது. அன்றியும் அண்மையில் இந்திய அணியின் பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தின் போதும் பங்களாதேஷ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஒருநாள் போட்டி ஒன்றில் இந்திய அணியைத் தோல்வியடையவும் செய்தது.

இறுதியாக அவ்வணி பங்கு பற்றிய சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் வீரர்கள் சாதனைகளைப் படைத்ததுடன் டெஸ்ட் தொடரையும் ஒரு நாள் தொடரையும் கைப்பற்றிவிட்டனர். இது அவ்வணிக்குக் கிடைத்த வரலாற்று வெற்றியாகும்.

இத்தொடரில் துடுப்பாட்ட வீரர்களும் சதங்களைப் பெற்றதுடன் பந்துவீச்சாளர் இனமுல் ஹக்- ஒரு இனிங்சில் 7 விக்கெட்டுக்களை எடுத்த இளம் வயது வீர் என்றபெருமையையும் பெற்றுக் கொண்டார். இந்த வரலாற்று வெற்றியை வீரர்கள் மட்டுமன்றி முழு தேசமுமே கொண்டாடி மகிழ்ந்துள்ளது.

எனவே பங்களாதேஷ் இந்த வெற்றியில் மட்டும் திளைத்திருக்காமல் மேலும் வெற்றிகளைப் பெற உழைக்க வேண்டும். அவ்வாறு அது வளர்ச்சி பெறுமாயின் ஏனைய ஆசிய நாடுகளுக்கும் அது சவால் நிறைந்த அணியாகத் திகழலாம். மட்டுமன்றி ஆசிய பிராந்திய நாடுகளுடன் கூடி எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறும் உலக 11பேர் அணியுடனான சுனாமி நலநிதி ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டியை வெல்ல வாய்ப்பை ஏற்படுத்தலாம்.

# சரிவு நிரந்தரமல்ல

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தானே உலக கிரிக்கெட் ராஜ்யத்தில் வல்லரசு என்பதை நேற்று முன்தினம் வரை நிரூபித்துள்ளது. இதற்குக் காரணம் அந்த அணியின் வீரர்களின் முழுப்பங்களிப்பு எனலாம். ஒரு அணிக்கு எதிரான போட்டியில் வெற்றியிலக்கு ஓட்டத்தைப் பெறவேண்டுமானால் துடுப்பாட்ட வீரர் இருக்கிறார்கள். அல்லது தமது ஓட்ட எண்ணிக்கையை நெருங்க விடாது விக்கெட்டுக்களைக் கைப்பற்ற வேண்டுமா அதற்கும் பந்து வீச்சு மன்னர்கள் இருக்கிறார்கள்.

இவ்வாறு அந்த அணிக்குள் திறமையான வீரர்கள் இருப்பினும் ஒரு சில வீரர்களின் மனக்கசப்புக்கும் இடமிருந்தே வருகின்றது.

அதற்கு உதாரணம்ாக அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான மத்தியு ஹெய்டனைக் குறிப்பிடலாம்.



அவா தற்போது மிகவும் மனவேதனையுடன் காணப்படுவதாகத் தெரிகிறது. காரணம் அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுடன் அந்நாடும் பங்கேற்ற வி.பி கிண்ண முக்கோண போட்டியின் இரு இறுதிப்போட்டிகள் உட்பட நான்கு போட்டிகளில் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்பதே.

இந்தப் போட்டியில் ஹெய்டன் பிரகாசிக்கத் தவறிய போதிலும் அவர் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதை மறுப்பதற்கு இல்லை. கடந்த வருடம் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளின் போது அவர் இரட்டைச் சதம் அடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஒரு நாள் போட்டிகளிலும் இவர் திறமையாக செயற்பட்டு வந்தார்.

தற்போது அவரை அணியிலிருந்து நீக்கியிருப்பதால் தெரிவுக்குழுவினர் அவரை வஞ்சித்து விட்டதாக அவர் குமுறுகிறார். எனினும் அண்மையில் ஏற்பட்ட வீழ்ச்சியை அவர் திருத்திக் கொண்டு மீண்டும் அணிக்குத் திரும்ப அவர் உறுதியான நம்பிக்கையுடன் இருக்கிறார்.


தற்போது இவரின் துடுப்பாட்ட இடத்தை மைக்கல் கிளார்க் பிடித்துள்ளார். இவரது நீக்கம் பற்றி சக டெஸ்ட் அணி வீரர்களும் வருத்தம் தெரிவித்துள்ளனர். குறிப்பாக ஷேன்வோர்ன் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

எனினும் இம்மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் நியூசிலாந்து அணியுடனான போட்டித் தொடரில் அல்லது ஜூனில் நடைபெறவுள்ள இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடரில் இவர் இணைக்கப்படுவாரா என்பதை தெரிவுக்குழு தீர்மானிக்கும்.

வடிவேல்

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

08.02.1999 அன்று மன்னார் மாவட்டம் கச்சதீவுக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடன் திடீரென ஏற்பட்ட நேரடி மோதலில்...



ஈகத்திருவிளக்கே குமரா...
விறல் வேங்கையாய் நீ வீரம் பெற்று
விடுதலைப் பயணத்தில் விரைந்த அழகு
இன்றும் எம் கண்களுக்குள் நிழலாடுகிறது.
நிஜமான வாழ்வு தேசவாழ்வென நினைத்தாயே
அது பெருமை
எம் வாழ்வை அழித்த நீசரை முடித்தாயே
அது உன் கடமை
கச்சதீவுக் கடற்பரப்பில்
காவியமான உன் தேசிய ஆத்மம்
என்றும் எம் நினைவுகளுக்குள் உயிர்வாழும்.
காலப் புரள்வுகளின் நீட்சிப் பெருவெளிக்குள்
உன் காவியம் உணர்வோடு ஜீவிக்கும்

இந்நாளில் நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், போராளிகள், நண்பர்கள், காவல்துறையினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

த.முகவரி
க.கந்தசாமி(சங்கர் குடும்பம்)
02 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

தகவல் குடும்பத்தினர்

(சி–11309)

## மேஜர் குமரன்

கனகசிங்கம் ஜெயரூபன் அல்லாரை தெற்கு மீசாலை, யாழ்

பிறப்பு–17.11.1974

வீரச்சாவு–08.02.1999

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## மயில்வாகனம் விமலாதேவி

பிறப்பு:02.01.1954 இறப்பு:26.12.2004

"வீட்டுக்குள் விடிவிளக்காய் சுடர்விட்ட விமலா
ஊருக்குள் உத்தமியாய் உலாவந்ததேவி
எவருக்கும் ஏதும் இடர் செய்திடாமல்
பாருக்குள் வாழ்ந்த காலம் போதும் என்று–கடல்
நீருக்குள் சிக்கி உயிர் நீத்த தாயே
யாருக்குச் சொல்வோம் நம் துயரதனை
நாளுக்கு நாள் நாமும் ஏங்குகிறோம் சொந்த வதனம் காண
நாற்பத்தி ஐந்து நாட்கள் சென்றதம்மா வெகுவிரைவினிலே'

ஆழிப்பேரலையில் சிக்குண்டு உயிரிழந்த எமது குடும்பத் தலைவியின் பிரிவால் துயருற்றிருந்த எமக்கு ஆறுதல் கூறியும் அனுதாபம் தெரிவித்தும் இன்னும் பல வழிகளில் உதவி புரிந்தும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 09.02.2005 இல் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்–வத்திராயன் வடக்கு,
வீ.எஸ் மயில்வாகனம்
தபால் அதிபர் (கணவர்)

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்,

(சி–1241)

# ஒரு கொடியில் பூத்த மலர்களின்
# 45ஆம் நாள் நினைவலை



திரு.மார்க்கண்டு
பிறப்பு: 18.06.1937
மா.தவமணிதேவி
பிறப்பு: 21.07.1949



மா.பாக்கியம்
பிறப்பு: 13.11.1970



வே.சுமத்திராதேவி
பிறப்பு: 25.09.1971



பா.விஜயகுமாரி
பிறப்பு: 17.07.1975



வே.சயந்தன்
பிறப்பு: 01.04.1992



தி.மங்கயற்கரசி
பிறப்பு: 28.07.1967



த.நிசாந்தினி
பிறப்பு:11.01.1990



தி.மயூரா
பிறப்பு:20.08.1999



வே.சாணுஜன்
பிறப்பு:28.08.1996

26.12.2004 அன்று ஏற்பட்ட "சுனாமி"
ஆழிப் பேரலையில் சங்கமமாகிய எமது உறவுகளை
நினைவு கூரும் இந்நாளில் எமக்கு சகல வழிகளிலும்
ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றியைத்
தெரிவிப்பதோடு இவர்களின் ஆத்மாக்கள் சாந்தி
அடையப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கள்ளப்பாடு,
முல்லைத்தீவு

தகவல்:-
குடும்பத்தினர்
(து.நித்தியானந்தன்)

(5706)

# 45ஆம் நாள் நினைவுகளுடன்



செல்வன் அ.ஐதுஷன்
பிறப்பு: 2003.07.11
திருமதி. அ.மேரிஜெனல் சில்டா
பிறப்பு: 1983.08.19



திருமதி. லோ.பாலரதி
பிறப்பு: 1960.10.01
செல்வி.லோ.மேரிஜெர்மினா
பிறப்பு: 2000.10.01



திருமதி. வி.புஸ்பலதா
பிறப்பு: 1974.12.06



திருமதி. யோ.கணேசவதி
பிறப்பு: 1961.04.11



திருமதி.ஜெமஞ்சுளாதேவி
பிறப்பு: 1972

அலை பொங்கி கரைதொட்டு எம்
காலை வருடிச் சென்றபோது
இயற்கையின் அழகைப்பார்த்து
இன்பம் இதுதானென
நினைத்திருந்தோம் அன்று
ஆழப் பொங்கிய ஆழிப் பேரலை
கரையையும் மேவி ஊருக்குள் புகுந்து
உயிரான உறவுகளை
அலையோடு காவிச் சென்றபோது
துடி துடித்துப் பேச்சிழந்தோம்
கடல்த் தாயே...
கடலேறிச் சென்றவரை ஆழ்கடலில்
கயவன் அழித்தபோது
கருவேங்கையணியின் பின் தம்
உயிர் துறந்து உன்னை
நம்பித்தானே தங்கள் வாழ்வைத்

2004.12.26 ஆம் நாள் கடற் கோள் அனர்த்தத்தில்
சாவடைந்த எமது பணியாளர்களின் உறவினர்களையும், ஏனையோரையும்
இன் நாளில் நினைவு கூருகிறோம்!

ஆயப்பகுதி, நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

போராளிகள்,
பணியாளர்கள்.

(5707)

தொடர்ந்தார்கள் -இவர்களை
ஏன் ஏமாற்றினாய்?
அள்ளி அள்ளித் தந்த கடலே -எம்
மக்களை அள்ளிச் சென்றது ஏன்?
வளம் தந்த கடலே - எம்
உளம் நோக நடந்தது ஏன்?
வாழ்வு தந்து வாழ வைத்த நீ
அன்று மட்டும் எம் மக்களுக்குச்
சாவு கொண்டு வந்தது ஏன்?
"கடற்கோளே" எம் தேசத்துக்குள்
ஏன் புகுந்தாய்?
அழித்துவிட்டாய் ...ஆனால்
எச்சத்திலும் எழுவோம்
எம் உயிருள்ள வரை
கடல் நீருடன் கரைந்து விட்ட
இனிய மக்களுக்காய்...எம்
விழிகள் சொரியும் கண்ணீர்ப்பூக்கள்!!!


## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாய்கொரு முத்தாக

11

02

1973



தமிழ்த் தாய்க்கு வித்தாக

08

02

1999

### மேஜர் மேனன்/ரூபன்ராஜ்
### கந்தசாமி குணாளன்

**08-02-2005**

குஞ்சர பவனம் கண்டாவளை
த. மு 1ஆம் கட்டை சுண்டிக்குளம் வீதி
புதிய புன்னை நீராவி

பாசத்தின் சிகரமாய் பண்பிற்கோர் உத்தமனாய் பாரில் அவதரித்த பெருமகனே! தேசத்தின் விடிவிற்காய்த் தமிழினத்தின் வாழ்விற்காய்த் தேகம் தனை ஈந்த மாவீரனே ஆறாண்டான போதும் ஆறா விழிகளுடன் ஆவலுடன் நினைக்கின்றோம் இந் நாளில் இவருடன் வீர காவியமான சகமாவீரர்களையும் எம் நெஞ்சில் நினைவு கூருகின்றோம்.

பிரிவால் வாடும்
உந்தன் குடும்பத்தினர்

(5643)

## இ.தொ.கா.விலிருந்து 3 பா.உ.கள் வெளியேறுவர்?

இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலிருந்து மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கட்சித் தலைமையின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ள மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விலகுவது குறித்து ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில் இந்தச் செய்தி குறித்து இலங்கை தொழிலாளர்காங்கிரஸின் நிதி செயலாளரும் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் தோட்ட வீடமைப்பு சமூக சேவைகள் அமைச்சர் முத்து சிவலிங்கத்தைத் தொடர்பு கொண்டபோது இது பொய்யான பிரசாரமாகும் எனத் தெரிவித்தார்.

## 45 ஆம் நாள் நினைவினில் நாம்

கடந்த 26/12/2005 அன்று முல்லைத்தீவில் சுனாமியால் எம்மை விட்டுப் பிரிந்த எம் உறவுகளின் நினைவினில் நனைவோம்.

உதயசூரியன் சனசமூக நிலைய உப தலைவரான அமரர் அன்லிங்கம்- சொர்ணலிங்கம்

உதயசூரியன்
**சனசமூக நிலைய உறுப்பினர்களான**

அமரர் திருமதி வினாயக மூர்த்தி ஞானமலர்
அமரர் திருமதி தம்பிஐயா –மகாலட்சுமி
அமரர் செல்வி தம்பி ஐயா –தர்மினி

மங்காப் புகழுடன் வாழ்ந்த எம் உறவுகளே மக்களின் மனங்களில் நீங்காத இடம் பிடித்தவர்களே நாம் நினைக்கவில்லை கடல் அன்னை உங்களை அழிப்பாள் என்று நாட்கள் நாற்பத்தைந்து சென்றாலும் உங்கள் நினைவுடன்...

உதயசூரியன்
சனசமூக நிலையம்
வட்டுவாகல்
முல்லைத்தீவு

(5639)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சுபலட்சுமி இராசேந்திரம்**

தாயின் மடியில்:- 21.10.1970
கடலின் அடியில்:- 26.12.2004
(உடுத்துறை வடக்கு, தாளையடி)



**செல்வி விதுர்ஷா சிறீதரன்**

தாயின் மடியில்:- 25.07.2003
கடலின் அடியில்:- 26.12.2004
(வத்தராயன் வடக்கு, தாளையடி)

26/12/2004 அன்று ஏற்பட்ட கடல் அனர்த்தத்தின் போது அகால மரணமானார்கள். இவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

தற்காலிக முகவரி:-
7ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு

தகவல்:–
திரு இராசேந்திரம் (கணவன்)
பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

(5648)

## 45 ஆம் நாள் கண்ணீர்க் காணிக்கை

26-12-2004 இல் "சுனாமி" அனர்த்தத்தில் எம்மை விட்டுப் பிரிந்த எங்களது பாடசாலையைச் சேர்ந்த மாணவச் செல்வங்கட்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் சமர்ப்பிப்பதோடு அன்றைய தினம் எம்மை விட்டுப் பிரிந்த அனைவரதும் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள், பணியாளர்கள்
மு/ முல்லைத்தீவு ம.வி

(5672)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்

24

02

1984



மறைவு

26

12

2004

### யோகதாசன் கலைவாணி

**கொக்குளாய்– முல்லைத்தீவு**

அள்ளித் தந்த முல்லையே
இந்த மலரையும் பறித்துச் சென்றது
வீட்டுக்கு செய்த பணியை விட-அதிகம்
நீ நாட்டுக்குச் செய்தாய்
நீ விட்டுச்சென்ற பணியை
உன் நினைவோடு தொடர்வோம்

குறிப்பு:- 26.12.2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பால் உயிர் நீத்த அனைவரையும் இந்நாளில் நினைவு கூருகிறோம். அன்று நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தற்காலிக முகவரி
பவான் வீட்டுத்திட்டம்,
9 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

தகவல்:-
யோ.யூட்நிமலன் (சகோதரன்)
காந்தரூபன் அறிவுச்சோலை

(5632)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரிகையும்



மலர்வு: – 1955. 02. 05
இறப்பு: –2004. 12. 26

**தம்பிஐயா –மகாலட்சுமி**



மலர்வு: – 1982. 05. 10
இறப்பு: –2004. 12. 26

**தம்பிஐயா –தர்மினி**

அன்பிற்கு அன்பான தெய்வங்களே
மலர்ந்த உங்கள் வதனச் சிரிப்பை
வாழ்நாளில் காணக்கிடைக்குமோ
மண்ணில் மடியும் வரை-மாறாது
எம் துயரம்


உங்கள் பிரிவால் துயருறும்
ஆ.தம்பிஐயா
த.சிறிதரன்
த.சிறிகரன்

கள்ளப்பாடு தெற்கு
முல்லைத்தீவு

(5630)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

பெற்றவர்கள் காத்திருக்க உற்ற துணை தவித்திருக்க
பற்றுள்ள பாச உறவுகள் பரிதவித்து நிற்கையிலே
ஆழிப் பேரலையில் அள்ளுண்டு போன எங்கள் அன்பு உறவுகளே!
உம்மை நினைத்து நாம் விழிநீர் சொரிந்து நிற்கின்றோம்
உமதான்மா சாந்தி பெற ஓயாது இறைவனை வேண்டுகின்றோம்
சாந்தி! சாந்தி! சாந்தி!




சந்திரகுமார் லலிதாமணி
1970.13.09

ஆழியின் சீற்றத்தில்
26.12.2004



ஜேந்திரன் றதி
1975.10.25

ஜேந்திரன் சுஜி
2000.08.18



சந்திரகுமார் லக்சி
1991.09.17

த. முகவரி
க. கோல்ரைன்
சட்டத்தரணி
10ஆம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு

தகவல்
துயரசையும்
பாச உறவுகள்
கணவர், பிள்ளைகள்
சந்திரன் குடும்பம்
ஜேந்திரன் குடும்பம்

(5675)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



சந்திரகுமார்
உதயசசி
(உருத்திர மகாவித்தியாலய
G.T.7 ஆசிரியை)
26.11.1977



சந்திரகுமார்
தனுசியன்
23.05.2004



சத்திவேல்
விதுசா
03.12.2002



சத்திவேல்
சர்மினி
17.01.2000

ஆழியின் சீற்றத்தில் 26.12.2004

கண்ணிமைக்கும் நேரத்திலே
கடலலையாய் எழுந்து வந்து
கண்மணிகளே உங்களை அழைத்தானோ
கண்ணீருடன் உம் பூமுகத்தை தேடுகிறோம்
ஒரு தடவை எம் அருகே வரமாட்டீர்களா?

ஆழியவளை
தாளையடி

(5644)

தகவல்
குடும்பத்தினர்

# 45ஆம் நாள் நினைவினிலே

ஆழியின் சீற்றத்தில்
26.12.2004



இராசகுமார் மோகனலதா
1992.08.01
வண்ணாங்குளம்



அருளானந்தம் மேரி அனுசியா
13.06.1990
கோம்பாவில் 2ம் வட்டாரம்



ரஞ்சன் மகேஸ்வரி
1989.01.09
செல்வபுரம் முல்லைத்தீவு



சின்னராசா சுகந்தினி
18.06.1996
ஆழியவளை உடுத்துறை

உதயத்தில் மலர்ந்த பூக்கள்
உதிர்ந்து விட்டனவா ?
கூடி மகிழ்ந்து வாழ்ந்தவர்கள்
கூடுகலைந்து சென்றதெங்கே
தேடி நின்றோம் தேடிநின்றோம்
கடலலையினுள்ளும் தேடிநின்றோம்
காணவில்லை கண்மணிகளை .........
கல்வி என்னும் படகேறி
கரைசேர பாரதியில் வந்துதித்தீர்
பட்டங்கள் பல பெற்று
பல்கலையும் கற்றுயர்ந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ்வீரென
எண்ணியிருந்தோம்
விடுமுறையின் காலமதால்
வீடுவரை சென்றவரே
எதிர்பார்த்துக் காத்திருந்தோம் உம்வரவை
ஏமாற்றம் தான் கிடைத்ததுவே
கங்கையுமைக் கொன்றதனால்
கலங்கியே நிற்கின்றோம் ஒரு கண நேரம்தானும்
காணக்கிடைக்கவில்லையே உம்முகம்
சிரித்த வதனமும் சிங்கார நடையும்
குறும்பு மொழிபேசி குதித்தோடி விளையாடி
இல்லமதில் செய்துவிட்ட குறும்புகள் தான்
எத்தனை ............எத்தனை.............
மறந்திடுமா உம் நினைவு
என்றென்றும் எம் நினைவினிலே
நிலைத்துவிட்ட செல்வங்களே!
உம் ஆத்மா சாந்திக்காக வேண்டி நிற்கும்



தர்மராஜா ஜெயந்தினி
28.05.1997
வண்ணாங்குளம் முல்லைத்தீவு

உம் பிரிவால் துயருறும்
பாரதி இல்ல சகோதரிகள், இயக்குனர்
பணியாளர்கள், ஆசிரியர்கள்

(5701)

# இத்தாலி லீக் கால்பந்து தொடர் ஜூவென்டஸ் அணி அதிர்ச்சித் தோல்வி



இத்தாலியின் லீக் கால்பந்து தொடரில் ஜூவென்டஸ் அணி தொடர்ந்து இரண்டாவது தோல்வியைத் தழுவியது.

இத்தாலியின் ரோம் நகரில் இத்தாலியன் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது. கடந்த சனியன்று நடந்த போட்டியில் முன்னணி கழகமான ஜூவென்டஸ், பலர்மோ அணியை எதிர்த்து விளையாடியது. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் பலர்மோ அணியின் முன்கள வீரரான பிரையன்சா அபாரமான கோல் ஒன்றை அடித்தார். இதற்குப் பதிலடி கொடுக்க முயன்ற ஜூவென்டஸ் அணியின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இறுதியில் இந்த அணி 0-1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது.

ஜூவென்டஸ் அணி தொடர்ந்து பெறும் இரண்டாவது தோல்வி இது. இதனால் புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருக்கும் நடப்புசம்பியனான ஏசி.மிலன் நெருங்கி வருகிறது. ஜூவென்டஸ் (50 புள்ளி) மிலன் (45 புள்ளி) முறையே முதல் இரண்டு இடங்களில் உள்ளன.

# ஸ்பானிஷ் லீக் கால்பந்து தொடர் ரியல் மாட்ரிட்டுக்கு அபார வெற்றி




ஸ்பானிஷ் லீக் கால்பந்துபோட்டியில் அபாரமாக ஆடிய ரியல் மாட்ரிட் அணி எஸ்பானியலை வென்றது. ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில் ஸ்பானிஷ் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது கடந்த சனி யன்று நடந்த லீக் போட்டியில் ரியல் மாட்ரிட்,எஸ்பானியல் அணிகள் மோதின. தொடக்கத்தில் இருந்தே ரியல் மாட்ரிட் வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். இவர்களின் அபார ஆட்டத்தினால் 4-0 என்ற கோல் கணக்கில் எஸ்பானியல் அணி வீழ்ந்தது. முன்னணி வீரரான ரால் இரண்டு கோல்களும், ஜிடேன் தாமஸ் கிராவிசன் தலா ஒரு கோலும் அடித்தனர். இந்த வெற்றியின் மூலம் ரியல் மாட்ரிட் அணி புள்ளிப்பட்டியலில் பார்சிலோனாவை நெருங்கியுள்ளது. பார்சிலோனா 51 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், ரியல் மாட்ரிட்47புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், வலன்சியா 38 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

# முத்தையா முரளிதரனின் அழைப்பை ஏற்று ஷேன்வோர்ன் இன்று இலங்கை வருகிறார்



சர்வதேச டெஸ்ட்கிரிக்கெட்டில் 566 விக்கெட்டுக்களை கைப்பற்றி உலக சாதனைக்கு உரியவராக திகழும் அவுஸ்திரேலியாவின் சுழல்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் இன்று இலங்கை வருகின்றார்.

இலங்கையில் சுனாமிக்கு பின் மீள் கட்டமைப்பு பணிகளுக்கு உதவுவதற்காக முத்தையா முரளிதரனுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே ஷேன்வோர்ன் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.


சிறிலங்காவில் மூன்று நாட்கள் தங்கியிருக்கும் ஷேன் வோர்ன் எதிர்வரும் புதன்,வியாழன் ஆகிய தினங்களில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட காலி, மாத்தறை ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சுனாமியால் சேதமடைந்த காலி சர்வதேச விளையாட்டரங்கை மீளக் கட்டியெழுப்புவதற்கு மெல்பேர்ன் நகரசபையின் உதவிகளை பெறவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மேலும் இலங்கையில் முன்னெடுக்கப்படும் மீள் கட்டமைப்பு பணிகளுக்கு நிதியுதவி வழங்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# அவுஸ்திரேலிய அணியுடனான தோல்வி எம்மை எந்தவிதத்திலும் பாதிக்காது

—இன்சமாம்



வி.பி.கிண்ணத்தொடரின் இறுதிப்போட்டியில் 2.0 என்ற வீதத்தில் தோல்வி அடைந்திருப்பினும் எல்லாம் நன்மையில் முடியும் என்ற எண்ணத்தோடு இந்தியாவிற்கான சுற்றுலாவை முன்னெடுப்போம் என பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

"இந்த இறுதி இரண்டு போட்டிகளிலும் தனது அணியினர் கடுமையாக உழைத்ததுடன் நல்ல கிரிக்கெட் ஒன்றையும் விளையாடி உள்ளனர்" என்று கூறினார்.

இந்தியச் சுற்றுலா கடினமான தொன்றாகவே எங்களிற்கு இருக்கிறது. வீரர்கள் நன்றாகவும் நம்பிக்கையுடனும் விளையாடுகின்றனர். அவர்கள் அதைத்தொடர்வார்கள்.என்ற நம்பிக்கை உண்டு பந்து வீச்சாளர்களுக்கு தொடரான காயப்பிரச்சினைகள் எமக்கு பலவீனமாக அமைந்திருந்தது. மொகமட் சமி பரீட்சார்த்த போட்டியின் பின் வீடு சென்று விட்டார். சொஹைப் அக்தர் வி.பி. இறுதி போட்டியில் விளையாடமுடியாது கால் மூட்டின் பின்புற தசை நார் பிரச்சினை யால் அவதிப்படுகிறார்.

முகமட் கலில் முதலாவது இறுதி போட்டியில் அவரது பந்தெறியும்கை சேதத்திற்குள்ளாகியது. எனவே ஞாயிற்றுக் கிழமை சிட்னியில் நடைபெற்ற இரண்டாவது இறுதிப்போட்டியில் அவரால் சிறப்பாகப் பிரகாசிக்க முடியவில்லை எனவும் இன்சமாம் தெரிவித்தார்.



மெக்சிக்கோவில் நடந்த "மெக்சிக்கோ கால்பந்து லீக் போட்டியில் செலாஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் லொராகுநஸ் அணியை வீழ்த்தியது. செலாஸ் வீரர் ரமல் மெடினாவிடம் (இடது) சிக்காமல் பந்தை தட்டிச் செல்ல முயல்கிறார் லொராகுநஸ் அணியின் எர்னஸ்டோ லோபஸ்.

# 2008 ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு பீஜிங்கில் புதிதாக 24 ஹோட்டல்கள்

அடுத்த ஒலிம்பிக் போட்டி சீனத்தலைநகர் பீஜிங்கில் 2008 இல் நடைபெற உள்ளது தெரிந்ததே.

அப்போட்டியைக் காண வரும் விருந்தினர்களைக் கருத்தில் கொண்டு பல்வேறு ஆயத்த ஏற்பாடுகளை இப்போதே செய்து வருகிறது பீஜிங் மாகாண ஒலிம்பிக் கமிட்டி.

அதன் ஒரு பகுதியாக போட்டிகளைக் காண வருபவர்கள் தங்குவதற்கு வசதிகளைச் செய்து தரும் முயற்சியில் இறங்கியுள்ளது அரசு.

மொத்தம் 10 ஆயிரம் அறைகளைக் கொண்ட 24 ஹோட்டல்கள் தற்போது ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு கட்டப்பட்டு வருகின்றன. இதையடுத்து அங்குள்ள ஹோட்டல்களின் எண்ணிக்கை 637 ஆகவும், ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் தங்குவதற்கான வசதியையும் கொண்டதாக அந்நகரம் இருக்கும்.

இவற்றில் விருந்தினர் மாளிகைகள் அடங்காது. அவையும் ஒலிம்பிக் போட்டிக்காக புதுப்பிக்கப்பட உள்ளன என பீஜிங் நகர துணை மேயர் ஜாங்மாவோ தெரிவித்துள்ளார்.

# அகமதாபாத்தில் ஆட பாக்.மறுப்பு போட்டி சென்னைக்கு மாற்றம்?


அகமதாபாத்தில் ஆட பாகிஸ்தான் மறுத்துவிட்டதால் 2-ஆவது டெஸ்ட் போட்டி சென்னைக்கு மாற்றப்படலாம் என்று தெரிகிறது. டெஸ்ட் தொடர் மார்ச் 4ஆம் திகதி தொடங்குகிறது. இதற்கு முன்னதாக அந்த அணி வரும் 27ஆம் திகதி முதல் முதலாம்திகதி வரை 3நாள் பயிற்சி ஆட்டத்தில் ஆடுகிறது. ஒருநாள் தொடர் மார்ச் 28ஆம் திகதி தொடங்குகிறது.

அகமதாபாத்தில், பாகிஸ்தான் அணி விளையாட மறுத்து விட்டதால் அந்த டெஸ்ட் போட்டி சென்னையில் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.






தாய்லாந்தில் நடந்த வால்வோ ஓபன் டென்னிஸ் தொடரில் நேற்றுமுன் தினம்நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் கோன்சிதா மார்ட்டினஸ் 63,3-6,6-3 என்ற செட்களில் ஜெர்மனியின அன்ன லீனா ஜிரோனிவெல்டை வீழ்த்தினார். வெற்றிக் கோப்பையுடன் மார்ட்டினஸ்.



2004 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஜப்பான் விளையாட்டு வீரருக்கான விருது கோசுகே கிடஜிமாவுக்கு கிடைத்துள்ளது. விருதுடன் கிடஜிமா.


# இந்திய இளம் பந்துவீச்சாளர்களுக்கு டென்னிஸ் லில்லி பயிற்சி வழங்குகின்றார்

பாகிஸ்தானுடனான போட்டியில் ஆடுவதற்காக இந்திய பந்து வீச்சாளர்கள் பலாஜி, சகீர்கான் ஆகியோர் சென்னையில் பயிற்சி மேற்கொள்கின்றனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இதற்கான பாகிஸ்தான் வீரர்கள் வரும் 25 ஆம் திகதி இந்தியா வருகிறார்கள். முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சுற்றுப்பயணத்துக்கான இந்திய வீரர்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. வீரர்களை தேர்வு செய்வதற்காக சம்பியன் கோப்பை கிரிக்கெட் பந்தயம் நடந்து வருகிறது.

இந்தப் போட்டியில் வீரர்களின் திறமையை அடிப்படையாக வைத்து இந்திய அணி அறிவிக்கப்படவுள்ளது. பாகிஸ்தான் அணிக்கு எதிராக பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சகீர்கான் மற்றும் பாலாஜி ஆகியோர் காயம் காரணமாக கடந்த சில மாதங்களாக அவதிப்பட்டனர். தற்போது குணம் அடைந்து விட்டனர். எனவே இவர்கள் இருவரும் தற்போது தீவிர பயிற்சி செய்து வருகிறார்கள். சென்னையில் முகாமிட்டுள்ள இந்த வீரர்களுக்கு முன்னாள் அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் டென்னிஸ் லில்லி ஆலோசனைகள் வழங்கி வருகிறார். இவர்களின் பந்து வீச்சு முறையிலும், லில்லி சில மாற்றங்களை ஏற்படுத்தினார். மும்பையின் முனப்பட்டேல் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அறுவைச் சிகிச்சை செய்தார். இவரும் தற்போது பந்துவீச்சு பயிற்சியை தொடங்கி உள்ளார். அறுவை சிகிச்சையால் முன்பைவிட தற்போது முனப் அதிவேகமாக பந்து வீசுகிறார் என்று லில்லி கூறினார்.

### சிந்தனைக்கு



இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சிகொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 08-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சட்டம் ஆட்சி செய்யின்...!

ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். ஆளும் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடே அவர் வெளியேறியதற்குக் காரணம் எனத் தெரிய வருகின்றது. வேறொரு வகையில் கூறுவதானால், ஜே.வி.பி யின் விருப்பிற்கு ஏற்ப சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செயற்படத் தயாராக இல்லாத நிலையிலேயே சோமவன்ச நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார் என்றே ஊகம் செய்ய வேண்டியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி க்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டின்படி சனாதிபதி சந்திரிகாவோ, அவரது சுதந்திரக் கட்சியோ நடந்து கொள்வதில்லை என ஜே.வி.பி அடிக்கடி குற்றம் சாட்டிவந்ததுண்டு. அது மட்டுமல்ல, அவ்வாறு தொடர்ந்தும் நடந்து கொண்டால் தாம் ஆட்சியைவிட்டு வெளியேற வேண்டிய எனவும் ஜே.வி.பி எச்சரித்து வந்தது. ஆயினும் இவை ஆரம்பத்தில் ஜே.வி.பி யின் பயன்பெறும் மிரட்டலாகவே இருந்தது.

ஆயினும், சுனாமி அனர்த்தத்தின் பின்னான ஜே.வி.பி யின் நடவடிக்கைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், சனாதிபதி சந்திரிகாவினதும் கடும் ஆட்சேபத்திற்குரியதாகியது. இதன் காரணமாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க் ஜே.வி.பி.யினரின் நடவடிக்கைக்கு எதிராக தனது நிறைவேற்று அதிகாரத்தைக்கூடப் பயன்படுத்தும் நிலைக்கு வந்தார்.

இத்தகைய நிலையில், ஜே.வி.பி யினருடனான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், சனாதிபதி சந்திரிகாவினதும் உறவு நிலை மோசமானதொரு கட்டத்தை அடைந்தது. ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சனாதிபதி சந்திரிகாவைச் சந்திப்பதற்கென பல தடவைகள் மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வி கண்டுள்ளன. இந்நிலையில், ஜே.வி.பி யினர் சில முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

இதன் பிரகாரம் ஜே.வி.பி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவிகளில் இருந்து விலகுவதாகவும் முடிவு செய்யப்பட்டது. ஆயினும், அரசாங்கத்தை ஆதரிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், ஜே.வி.பி. தனது தீர்மானத்தை நேரடியாக ஆதாவது உத்தியோகபூர்வமாக அரசாங்கத்திற்கு இதுவரையில் அறியத்தந்ததாக இல்லை.

ஜே.வி.பி இவ்வாறு நடந்து கொள்ளாமைக்கு ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவே காரணம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதாவது, ஆளும் கட்சியின் ஆதரவு இல்லாத நிலையில் ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இலங்கையில் நடமாடுவது தங்கியிருத்தல் என்பது சாத்தியமற்றதொன்றாகவே இருக்கும்.

ஏனெனில், ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க உட்பட அவரது கட்சியிலுள்ள பலர் நாட்டில் சட்டவாட்சி ஒன்று நடைபெறுமானால் வெளியில் நடமாடுவதென்பது இயலாத காரியமாகவே இருக்கும். அந்தளவிற்கு இவர்கள் மீது பல்வேறு வகைக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தக்கூடிய அளவில் இவர்களின் கடந்த கால நடவடிக்கைகள் இருந்ததுண்டு.

அதிலும் குறிப்பாக, ஜே.வி.பி கிளர்ச்சி செய்த காலத்தில் இவர்கள் புரிந்த படுகொலைகள், கொள்ளைகள், தீவைத்தல் என்பது போன்ற விடயங்கள் இன்னமும் மக்கள் மனங்களில் அழியாதவையாகவே உள்ளன. புதைக்கப்பட்ட சடலங்களையே கிளறி எறிந்தவர்கள் இவர்கள். மேலும், நாட்டைவிட்டு களவாகத் தப்பியோடிமை உட்பட சட்டவிரோதமாக செயற்பட்ட பல குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது உண்டு.

இந்தநிலையில், ஜே.வி.பி யின் தலைவர் உட்பட அக்கட்சியிலுள்ள பலர் பல் வேறு குற்றச் செயல்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்கள். நாட்டில் சட்டவாட்சி ஒன்று சீராக நடை பெற்றிருக்குமானால், ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க போன்றவர்கள் நாட்டிற்குள் இலகுவாகப் பிரவேசித்திருக்கவும் முடி யாது. ஆட்சியில் பங்குதாரர்கள் ஆகியிருக்கவும் முடியாது.

அதாவது, ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் தமது தேவை கருதி சட்டத்தைத் தமக்கு இசைவானதாக ஆக்கிக்கொண்டனர். நாட்டை விட்டுக் களவாகத் தப்பியோடியவர்கள் திரும்பிவரும் போது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக மாலை மரியதைகளுடன் வந்து சேர்ந்தனர். சட்டத்தின் முன் குற்றவாளிகளான இவர்கள் சட்டம் இயற்றும் பாராளுமன்றத்தில் முக்கிய பங்குதாரர்கள் ஆனார்கள். அதாவது, சட்டம் வளைக்கப்பட்டதினால் ஜே.வி.பி யின் தலைவர் இலங்கை மண்ணில் நின்று அரசியல் பேச வாய்ப்பேற்பட்டது.

ஆனால், தற்பொழுது ஏற்பட்ட சூழ்நிலை மாற்றமானது ஜே.வி.பி. தலைவருக்கு அச்சத்தை ஏற்படுத்தயிருக்கக்கூடும். அதாவது அரசியல் சூழ்நிலை பாதகமாக மாறிவிடக்கூடிய சூழல் உரு வாகலாம் என்ற அச்சம் காரணமாக சோமவன்ச நாட்டைவிட்டு வெளியேறியிருக்கலாம். அதாவது, சட்டம் தமக்கு எதிராகப் பிரயோகிக் கப்படலாம் என்ற ஐயுறவு எழுந்தவுடனேயே சோமவன்ச நாட்டை விட்டுச் செல்ல தீர்மானித்திருத்தல் கூடும்.

இவ்வாறாக, சட்டவாட்சிக்கு முகம் கொடுக்க முடியாதவர்களே விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேசுவது அரசியல் யாப்பிற்குப் புறம்பானது, எனவும் சிறிலங்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனவும் கூக்குரல் இடுக்கின்றனர். நாட்டிற்குத் தம்மால் தான் சுபீட்சத்தை ஏற்படுத்த முடியும் எனச் சித்தாந்தம் பேசுகின்றனர்.

## திருமலையில் இடைத்தங்கல் முகாம்மை யார் அமைப்பதென சனாதிபதி செயலகமே முடிவு செய்யும்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினால் அழிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக இடைத்தங்கல் விடுதிகளை நிர்மாணிக்கும் பொறுப்பை எந்தெந்த அரசசார்பற்ற நிறுவனங்களிடம் ஒப்படைப்பது என்ற முடிவு கொழும்பில் சனாதிபதி செயலகத்தில் எடுக்கப்படும் என்று திருகோணமலை மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை மாவட்டச் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் எந்தெந்த நிறுவனங்களிடம் இடைத்தங்கல் விடுதிகள் நிர்மாணத்தை ஒப்படைப்பது என்று திருமலை மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இறுதி முடிவு எடுக்க ஏற்பாடு செய்திருந்தது. அதற்கிணங்க இடைத்தங்கல் விடுதிகளை நிர்மாணிக்க முன் வந்துள்ள அமைப்புக்களின் கோரிக்கைகளையும் ஒன்றியம் பெற்றிருந்தது.

எனினும் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் இது தொடர்பான சகல கோரிக்கைகளையும் சனாதிபதிக்கு அனுப்பும்படியும் அங்குவைத்தே எந்தெந்த நிறுவனங்களிடம் இடைத் தங்கல் விடுதிகளை நிர்மாணிக்கும் பொறுப்பை ஒப்படைப்பது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் மாவட்டச் செயலகத்திற்கு கொழும்பிலிருந்து அறிவுறுத்தல் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனை அடுத்து இடைத்தங்கல் விடுதிகளை நிர்மாணிக்கும் பொறுப்பை முன் வந்துள்ள நிறுவனங்கள் மத்தியில் பங்கீடு செய்யும் திட்டம் கை விடப்பட்டது. இது தொடர்பாக நிறுவனங்களின் கோரிக்கைகள் அனைத்தும் சனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் என்று அரசாங்க அதிபர் தெரி வித்தார். கடற்கோளினால் திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 7500 வீடுகள் அழிந்தன. பாதி அழிவுற்ற வீடுகளும் இதில் அடக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசசார்பற்ற நிறுவனங்கள் திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 23 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளன என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (25)

### -மாத்தறையில் சுனாமி தொடர்பான-

## மீள் கட்டமைப்பு அபிவிருத்திக் குழுவில் ஜே.வி.பி.யினர் கலந்து கொள்ளார்கள்

மாத்தறை மாவட்டத்தில் சுனாமி மீள் கட்டமைப்பு தொடர்பானஅபிவிருத்தி குழுவில் அங்கம் வகிப்பதில்லை என ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது. அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் தமது உறுப்பினர்கள் அங்கம் வகிக்க மாட்டார்கள் என ஜே.வி.பி அரசாங்கத்திற்கு அறிவித்துள் ளதாக தெரியவந்துள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏனைய மாவட்டங்களில் அமைக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ செயலணியில் தமது உறுப்பினர் ஒருவருக்குக் கூடவாய்ப்பு வழங்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தியுள்ள ஜே.வி.பி தரப்பு இந்த நிலையில் மாத்தறை மாவட்டத்தில் மட்டும் தம்மை இணைப்பது அரசியல் இலாபம் கருதிய செயற்பாடு என்றும் விமாச்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மாத்தறை மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட ஜே.வி.பி உறுப்பினர் கூட அதிகாரம் அற்ற நிலையில் பார்வையாளர் நிலையிலேயே நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் அங்கு மேற்கொள்ளப்படும் நிதிப்பயன்பாடு உட்பட ஏனைய விடயங்களைக் கண்காணிக்க முடியாத நிலையே காணப்படுவதாகவும் ஜே.வி.பி தரப்புவிசனம் தெரிவித்துள்ளது.

## ஐரோப்பிய விஜயம் குறித்து ரணில் ஐ.தே.க.பா.உ களுக்கு விளக்கம்

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து பேசியுள்ளார். எதிர்கட்சி தலைவரின் ஐரோப்பிய விஜயம் குறித்து விளக்கமளிக்கும் விதமாக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. சுனாமியால் பாதிப்படைந்துள்ள நாட்டை மீளக் கட்டி யெழுப்பும் அரசாங்கத்தின் நடவடிக் கைக்கு ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்றும் எதிர்வரும் ஆறு மாத காலப்பதிக்குள் அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்திதிட்டங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கும் என்று ஏற்கனவே அறிவித்த தீர்மானம் தற்போதும் மாற்றமின்றித் தொடர்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தனது ஐரோப்பிய விஜயத்தின்போது அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிர்மாணப் பணிகளில் இணைந்து செயறபட வேண்டியதன் அவசியம். குறித்தும் சமகாலத்தில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் தன்னிடம் வலியுறுத் தியதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (32)

## மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டே அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்

### உதவி வழங்கும் சர்வதேச நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டி எழுப்பும் போது மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இலங்கைக்கு உதவிகளை வழங்கும் சர்வதேச நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. அந்தந்த மாவட்டங்களின் சேதத்தின் அளவிற்கு ஏற்ப புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான நிதிஉதவி பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதையே உதவி வழங்கும் நிறுவனங்கள் வலியுறுத்துவதாகவும், புனமைப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படும் நிதியின் பிரதி பலன்கள் பொது மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் திட்டமொன்று காணப்பட வேண்டும் எனவும் உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் பீற்றர் ஹரோல தெரிவித்துள்ளார்.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி ஆகியன சுனாமி அனர்த்தத்தினால் இலங்கைக்கு ஏற்பட்ட சேதம் குறித்து மேற்கொண்ட ஆய்வு தொடாபாக தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். புனரமைப்பு நடவடிக்கைக்காக இலங்கைக்குப் பெருமளவு நிதி கிடைக்கின்றது. இதனால் இந்த நிதி பயன்படுத்தப்படும் முறையை வெளிப்படையாகப் பயன் படுத்துவதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நிதி உதவிகள் தொடர்பான கணக்கு வழக்குகள் மக்களுக்கு வெளிப்படையாக இருக்கவேண்டும இதன்மூலம் புனரமைப்பு நடவடிக்கைகளினால் தமது வாழ்க்கை வழமை நிலைக்கு மாற்றப்படுமா இல்லையா என்பது குறித்து மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்க முடியும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## நிதி உதவிகள்ள வழங்கிவிட்டு மெளனமாக இருக்கப் போவதில்லை

### -ஆசிய அ.வ பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நிதி உதவிகளைக் காசோலைகளாக வழங்கிவிட்டுத் தாங்கள் மெளனமாக இருக்கப்போவதில்லை. இதன் பின்னர் என்ன நடக்கின்றது என்பதைக் கண்காணிக்க உள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிப்பணிப்பாளர் அலெக்ஸ்சாண்டர்பியோ கூறியுள்ளார்.

நிதி உதவிகள் பயன்படுத்தப்படும் முறை குறித்து கண்காணிப்பதற்காக உலக வங்கியும், சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கியும் தனது நிறுவனமும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், நிதி உதவி குறித்து தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் கூறிய அவர், பீற்றர் ஹரோல் தெரிவித்த கருத்தைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும், அவர் இதேவேளை நிதி உதவிகள் தொடர்பாக சாதாரண கணக்கு வழக்குகளை மாத்திரம் பேணுவதல்ல. நிதி உதவிகளைக் காசோலைகளாக வழங்கி விட்டு நாம் மௌனமாக இருக்கப்போவதில்லை. இதன் பின்னர் என்ன நடக்கின்றது. என்பதையும் நாம் கண்காணிக்கவுள்ளோம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை அலுவலகமும், அதன் அதிகாரிகள் குழுவும் இந்த நிதி செயற்றிட்டங்கள் பயன்படுத்தப்படும் முறை குறித்து தொடர்ந்தும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருவோம் என்றார் அலக்ஸ்சாண்டர் பியோ.

# இருவேறு விபத்துகளில் மூவர் படுகாயம்

ஏ.9 பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற இருவேறு வீதி விபத்துக்களில் மூவர் காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுக்காலை 11மணியளவில் ஆனையிறவுப்பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த பாரவூர்தியொன்று இயந்திரக்கோளாறு காரணமாக வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்தவேளை அதற்குப்பின்னால் மற்றுமொரு பாரவூர்தியின் சாரதியும் பாரவூர்தியை நிறுத்திவிட்டு இருவருமாக முன்நின்ற பாரவூர்தியின் இயந்திரத்தை திருத்தமுற்பட்டுக்கொண்டிருந்தவேளை அவ்விரு பாரவூர்திகளையும் கடந்து செல்ல முற்பட்ட மற்றுமொரு பாரவூர்தி திருத்தத்தில் ஈடுபட்டிருந்த சாரதியை மோதியதில் அவர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த பாரவூர்தியும் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த உந்துருளியும் பளைவைத்தியசாலைக்கு முன்பாகநேருக்குநேராக மோதியதில் உந்துருளியில் பயனித்த இருவரும் காயமடைந்து கிளிநொச்சி மடுத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (11)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளை

## பதவி வெற்றிடம்

**திட்ட இணைப்பாளர்**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன்இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையினால் நடாத்தப்படும் செஞ்சிலுவைச் சுகாதாரசேவையில் திட்ட இணைப்பாளராக சேவையாற்றுவதற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமையுடையவர்கள் எதிர்வரும் 15.02.2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் முலம் தங்கள் விண்ணப்பங்களை தகைமைச் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளுடன் கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகைமைகள் க.பொ.த.(உ/த) பரீட்சையில்(விஞ்ஞானப்பிரிவு) மூன்று பாடங்களில் சித்தி.ஆங்கிலம்/தமிழ் எழுத,பேச நன்கு தெரிந்திருத்தல் வேண்டும்.சுயமாகத் திட்டங்கள் தயாரிக்கவும்,செயற்படுத்தவும் தெரிந்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை 25 - 55 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.அடிப்படை கணினி அறிவு இருத்தல் வேண்டும்.கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும். உறவினரல்லாத இருவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

க. கணேஸ்,
கௌரவ செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சிக்கிளை

(சி-11245)


# அரசுக்கு ஈடான அந்தஸ்தை நோர்வே புலிகளுக்கு பெற்றுக் கொடுக்க முயற்சி

## நாட்டுப்பற்றுள்ள தேசிய அமைப்பு குற்றச்சாட்டு

வடக்கு-கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கான விசேட அலகொன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டே நோர்வேத் தூதுவர் உட்பட சில உலக நாட்டுப் பிரதிநிதிகள் முயற்சிப்பதாக நாட்டுப்பற்றுள்ள தேசிய அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது. இதனூடாக அரசாங்கத்திற்கு ஈடான அந்தஸ்தை தமிழீழ விடுதலைப்புலிக ளுக்கு பெற்றுக்கொடுக்க முயல்வ தாக குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளுக்கு நேரடியாக நிவாரணங்களை வழங்குவதற்கான ஓர் சூழலை ஏற்படுத்துவது இவர்களின் குறிக்கோள் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கான ஆழிப்பேரலை நிவாரணங்களை விநியோகிப்பதற்கான சர்வதேச உதவி கிடைக்கும் வகையிலான அலகு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று நோாவேத் தூதுவரால் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கருத்தை மேற்கோள் காட்டி நாட்டுப்பற்றுள்ள தேசிய அமைப்பு இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளது.

நோர்வேப் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்குச் சென்று அவர்களின் விருப்பத்திற்கேற்ப கருத்துக்களை தெரிவிப்பதற்கு அரசாங்கம் அனுமதியளிக்கக் கூடாது என்று அந்த அமைப்பு மேலும் கூறியுள்ளது.

# நல்லூர் கந்தசுவாமி ஆலயம்முன் வர்த்தக நிலையம் உடைத்துக் கொள்ளை

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு முன்பாக உள்ள புடவை வர்த்தக நிலையம் கடந்த வெள்ளிக் கிழமை நள்ளிரவு கொள்ளையிடப்பட்டுள்ளது. மிகவும் மக்கள் நடமாட்டமுள்ள வீதியில் உள்ள இந்தப் புடவை வர்த்தக நிலையுத்தின் பலமான பூட்டுக்கள் உடைக்கப்பட்டு நடந்துள்ள இந்தக் கொள்ளைச் சம்பவத்தின் போது பெறுமதி மிக்க புடவை வகைகள் பெருமளவில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவமானது அங்குள்ள வர்த்தகர்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது.

## அரசின்...

ளுக்கு கிடைக்காது போய் விடக்கூடிய அபாயகரமான சூழ் நிலை உள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப் பாளர் சி.இளம்பரிதி யாழ். குடா நாட்டிற்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் ஈவன்ஸ் குழுவினருக்குத் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழுவினருக்கும் -தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்து றையினருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இளம்பரிதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசு- புலிகளுக்கிடையிலான யுத்தநிறுத்தம் தற்போது அமுலில் உள்ள நிலையில் கூட சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வதேசத்தினால் வழங்கப்படும் உதவிகளை பாதிக்கப்பட்ட தமிழ பிரதேசங்களுக்கு வழங்காது வஞ்சனைப் போக்குடன் நடந்து கொள்கிறது.

தமிழ் மக்களுக்கான மனிதாபிமான தேவைப்பாடுகளைப் புறம் தள்ளிவிட்டு அரசியல் இராணுவபலப்படுத்தல்களில் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது. எனவே அரசின் சர்வதேச நிதி திசை திருப்பல் நடவடிக்கைகளுக்குத் துணைபோகாது சர்வதேசம் தமிழ் மக்களுக்கான உதவிகளை நேரடியாக வழங்க வேண்டும் எனவும் கோரினார்.

நேற்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பித்து இரண்டு மணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பில் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் றொபேட்ஐவான் குழுவினரும், விடுதலைப் புலிகள் சார்பில் யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். மாவட்ட அரசியல் துறைப் துணைப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (33,27,சு)

## வட-கிழக்கு

அக்கறை கொண்டுள்ளன. இந்நிலையில் இலங்கைக் கென வழங்கப்படும் சர்வதேச உதவிகள் தமிழர் பிரதேசங்களுக்கு உரிய வகையில் சென்றடையவில்லை என்று குறை கூறப்படுவதனாலேயே சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களூடாக உதவிகளைப்பகிர்ந்தளிக்க முடிவு செய்துள்ளோம்.

உடனடி உதவிகள் மட்டுமன்றி நீண்டகால அடிப்படையிலான மீள்கட்டுமான உதவிகளையும் சரிவரப்பகிர்ந்தளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது என மேலும் அவர் தெரிவித்தார் (33,சு)

## முன்பள்ளி

முன்பள்ளிச் சிறார்கள்"தேசக் கட்டுமானத்தின் சிறந்த சிற்பிகள் "முன்பள்ளி ஆசிரியர்கள்".எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வுகள் முல்லைத் தீவு சிலாபத்தையில் உள்ள பாடசாலையில் காலை 9.00 மணிகக்கும், யாழ். வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை பாடசாலையில் மாலை 2.00 மணிக்கும், வவுனியா நகர் சித்தானந்தா மண்டபத்தில் காலை 10.00 மணிக்கும், கிளிநொச்சி - சுண்டிக்குளம், மட்டக்களப்புகல்லாறு பகுதிகளில் பிற்பகல் 2.00 மணிக்கும் சத்துருக்கொண்டான் தமிழ் சுவிஸ் கிராமம் மற்றும் அம்பாறை திருகோணமலை, மன்னார், மாவட்டங்களிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. (21)

## சாவு அறிவித்தல்

### மனோகரன் இராசவதனா

இளவாலை தெல்லிப்பழையை நிரந்தர முகவரியாகக் கொண்ட மனோகரன் இராசவதனா சுகயீனம் காரண மாக 2005.02.06 ஆம் நாளன்று சாவடைந்துள்ளார். அன்னார் இராசரத்தினம் மனோகரன் (தலைமைக்காவலர் தமிழீழ காவல்துறை) அவர்களின் அன்பு மனைவியும், நிசாந்தனின் (அக்கராயன் மகாவித்தியாலயம்) அன்புத்தாயாரும், இராசதுரை, கெங்காதேவி ஆகியோரின் அன்பு மகளும், இராசரத்தினம், சிவலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும் ,காலம்சென்ற கெங்காநேசன், கெங்காதாசன் (அக்கராயன் மகாவித்தியாலயம்), கெங்காதரன் (கிழக்கு பல்கலைக்கழகம் மட்டக்களப்பு) கெங்கை ஆரூரன் (இசையமுதன் போராளி) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2005.02.08ஆம் திகதி (இன்று) மாலை 3.00 மணியளவில் அன்னாரின் தற்காலிக இல்லமான செட்டிகுளம் நேரியகுளம், வீரபுரம் வவுனியாவில் நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைகளுக்காக வீரபுரம் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்:-
இ.மனோகரன்,
தலைமைக்காவலர்,
தமிழீழ காவல்துறை.

(5708)

## சாவு அறிவித்தல்

பிறப்பு 1966 - 07 - 09



இறப்பு 2005 - 02 - 07

### குட்டித்தம்பி சர்வானந்தன்

நி.மு. கரவெட்டி, யாழ்ப்பாணம்.
த.மு. இராமநாதபுரம், கிளிநொச்சி.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2005.02.08 இன்று நடைபெற்று மம்மில் இந்து மயானத்தில் 12 மணிக்கு தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்
(குடும்பத்தினர்)

(5709)


இங்கே வெட்டவும்




கிளிநொச்சி அம்மன் களஞ்சியத்தால் நடாத்தப்பட்ட நெஸ்பிறே பரிசுப்போட்டியின் முதலாவது அதிஸ்டசாலி நேற்று திங்கட்கிழமை தெரிவுசெய்யப்பட்டார்.

அதிஸ்டசாலியின் பெயர் விபரம்
ப.ரங்கநாதன்
கறுக்காக்குளம்,
மன்னார்.

பரிசுக்குரியவர் கிளிநொச்சி அம்மன் களஞ்சியத்தில் நேரில் வந்து உரிய ஆவணங்களை உறுதிப்படுத்தி தனது ஏசியா ஈருருளியினைப் பெற்றுக்கொள்ளவும்.

தினமும் நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!
அதன் மேல்ப்பகுதியை வெட்டி அனுப்புவதன் மூலம்
ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் ஒரு
ஏசியா ஈருருளி உரிமையாளர் ஆகுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி: நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்,யாழ்சாலை,கிளிநொச்சி.

அம்மன் களஞ்சியம்
யாழ்சாலை,கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077



நெஸ்பிறே பரிசுப்போட்டியின் முதலாவதுஅதிஸ்டசாலி சிறுமி ஒருவரால் தெரிவுசெய்யப்படுவதை படத்தில் காணலாம்.

(சி-11266)


இப்பத்திரிகை கிளி[illegible]சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது